தமிழ் Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, JANUARY 26, 2022
புதன்கிழமை ஜனவரி 26, 2022 | ஒளி: 07 கதிர் 215 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free



# மின்வெட்டு யோசனை நாளை பரிசீலனை

மின்சாரம் தயாரிக்க போதுமான எரிபொருள் கையிருப்பு நேற்று (25) முதல் நாளை 27ஆம் திகதி வரை உள்ளமையால் மேற்குறிப்பிட்ட தினங்களில் மின் வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, நேற்று (25) அறிவித்தது.

இலங்கை மின்சார சபையினால் மின்வெட்டு தொடர்பில் முன்வைக்கப்பட்ட யோசனையை மீண்டும் நாளை 27 ஆம் திகதி பரிசீலிப்பதற்கும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

நாட்டில் தொற்றுக்குள்ளாகும்

# பாதிப் பேருக்கு ஒமிக்ரோன்?



நாட்டில் தற்போது இனங் காணப்படுகின்ற கொரோனா தொற்றாளர்களில் 50 சதவீதமானவர்கள் ஒமிக்ரோன் தொற்றுக்கு உள்ளாகி இருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம் காணப்படுவதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது அறிகுறிகள் அற்ற அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், அவர்களில் அதிகமானவர்கள் ஒமிக்ரோன் மாறுபாடு தொற்றியவர்கள் என்று குறிப்பிட்டார்.

அவர்களில் டெல்டா மாறுபாட்டையும் கொண்டவர்கள் இருக்கக்கூடும் என்பதை மறக்கக்கூடாது எனவும் அவர் எச்சரித்துள்ளார். நாட்டில், நாளாந்தம் 800 க்கும் அதிகமான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் எனவும் தற்போதைய சூழ்நிலை மிக ஆபத்தானது எனவும் சுட்டிக்காட்டினார்.

தாம் செல்கின்ற பிரதேசங்களில் குறைந்தபட்சம் ஒருவரேனும் கொரோனா தொற்றுடன் இருக்கக்கூடும் என்ற எண்ணத்துடன், சுகாதார அறிவுறுத்தல்களைச் சரியான முறையில் பின்பற்ற வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளார்.

## ஒன்பது எம்.பிக்களுக்கு கொரோனா

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, இராஜாங்க அமைச்சர்களான ஜயந்த சமரவீர மற்றும் திலும் அமுனுகம மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள ஆகியோருக்கு, நேற்றும் நேற்று முன்தினமும் வைரஸ் தொற்று இனங்காணப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## கெங்கல்ல பாடசாலைக்குப் பூட்டு

க்ஷேன் செனவிரத்ன

கண்டி- கெங்கல்ல பிரதேசத்திலுள்ள தேசிய பாடசாலையில் மாணவர்கள் ஐவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது உறுதியானது.

ஆகையால் அப்பாடசாலையின் 8 ஆம் மற்றும் 10ஆம் வகுப்புகளுக்கு இரண்டுவாரகால விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அவ்விரு வகுப்புகளும் இரண்டு வாரங்களுக்கு மூடப்பட்டிருக்கும்.

தொடர்ச்சி P2

## முல்லைத்தீவு பொலிஸார் மூவருக்கு தொற்று

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் போதே, இவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.


பெண் உத்தியோகத்தர் ஒருவரும், இரண்டு ஆண் உத்தியோகத்தர்களுக்குமே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாதிக்கப்பட்டவர்கள், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் கொரோனா தடுப்பு பிரிவு விடுதியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

மானிப்பாயில்

## கோடரிகள், வாள்கள் மீட்பு

விநிதர்ஷன், எம்.றொசாந்த்



யாழ். மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலக்காய், பிள்ளையார் கோவிலுக்கு பின்புறமாகவுள்ள காணி ஒன்றிலிருந்து வாள்கள் மற்றும் கோடரிகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த காணியில் மிக இரகசியமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 09.30 மணியளவில் மானிப்பாய் பொலிஸாரால் குறித்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

2 கஜேந்திர கோடரிகள், நீளமான வாள் ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ள போதும், இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை.

பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பெரும்போகத்தில் நெற் செய்கையில்

## பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு



மகேஸ்வரி விஜயனந்தன்

பெரும்போக விவசாயத்தில் நெற்பயிர்ச்செய்கையில் ஈடுப்பட்ட விவசாயிகள் தாம் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கப் பெறவில்லை என கருதும் பட்சத்தில் அவர்களுக்கு மாத்திரம் நட்டஈடு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என தெரிவித்த விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, இதற்கமைய, நட்டஈடு வழங்குவதற்காக 40 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (25) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில்,

தொடர்ச்சி P2

## உத்தரவாத விலையை ஏற்க தயாரில்லை

### விவசாயிகள் சம்மேளனம் தெரிவிப்பு

ஒரு கிலோகிராம் நெல்லுக்கான உத்தரவாத விலையான 75 ரூபாயை ஏற்க விவசாய சமூகம் தயாராக இல்லை என அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக விவசாயிகளிடம் இருந்து நேற்று (25) முதல் ஒரு கிலோகிராம் நெல் 75 ரூபாய்க்கு கொள்வனவு செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக வினவியபோதே சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன



மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




தயா மாஸ்டருக்கு

## ஒத்திவைக்கப்பட்ட சிறை

எம்.றொசாந்த், க. அகரன்

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்பாளராகச் செயற்பட்ட "தயா மாஸ்டர்" என அழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதி மீது தொடரப்பட்ட வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன், அவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத்தண்டனை வழங்கி, வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராக இருந்த தயா மாஸ்டர், போரின் இறுதிக் கட்டத்தில் படையினரிடம் சரணடைந்தார். இந்நிலையில், அவருக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரால் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

தொடர்ச்சி P2



பொறுப்பை நிறைவேற்ற

## பூஸ்டர் டோஸை ஏற்றிக்கொள்ளவும்

மகேஸ்வரி விஜயனந்தன்

பிரஜைகளின் பொறுப்புகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும ,

தொடர்ச்சி P2

## சீன அரிசியை உண்டால் சிறுநீரகத்தை பாதிக்கும்



சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியை பொதுமக்கள் பயன்படுத்தினால் இலங்கையில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என ஐக்கிய மக்கள் சக்தி, நேற்று (25) தெரிவித்தது. கொழும்பில் நேற்று (25) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே,

தொடர்ச்சி P2

## குழாய் நீரை சிக்கனமாக பயன்படுத்தவும்

நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைந்து வருவதால், குழாய் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, நுகர்வோரை அறிவுறுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2



தோட்ட வைத்தியசாலைகள்

## மீண்டும் அரசாங்கம் வசம்

மகேஸ்வரி விஜயனந்தன்

பெருந்தோட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கே அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பெருந்தோட்டப்பகுதிகளில் உள்ள 450 சுகாதார நிலையங்களில் முதற்கட்டமாக 59 சுகாதார நிறுவனங்கள், மாகாண சுகாதார அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.


இது தொடர்பான அமைச்சரவை அறிவித்தலில், "மலையக சமூகத்தவர்களுக்கு மிகவும் பயன் வாய்ந்த சுகாதார சேவைகளை வழங்கும் நோக்கில், தோட்டத்துறையில் காணப்படும் சுகாதார நிறுவனங்களை மாகாண சுகாதார அதிகாரிகளிடம் ஒப்படைத்தல் மிகவும் பொருத்தமானதாக அமையுமென அடையாளங் காணப்பட்டுள்ளது.

"அது தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய பொறிமுறைகள் குறித்த பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில், குறித்த ஏனைய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

"குறித்த அதிகாரிகள் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய, தோட்டத்துறையில் காணப்படும் 450 சுகாதார நிறுவனங்களில் முதற் கட்டமாக 59 சுகாதார நிறுவனங்களை, மாகாண சுகாதார அதிகாரிகளுக்கு ஒப்படைப்பதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள

## சுகாதார நிறுவனங்கள் மேம்படுத்தப்படும்



எஸ்.கணேசன்

பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள சுகாதார நிறுவனங்கள் முழுமையாக மேம்படுத்துவதற்கே சுகாதார நிறுவனங்களை அரசு பொறுப்பேற்றுள்ளது என்று தெரிவித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இதன்மூலம் எமது மக்களின் சுகாதாரப் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும் என்று தெரிவித்தார் .

கொட்டகலை சி.எல்.எப் வளாகத்தில் நேற்று (25) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.

தொடர்ச்சி P2

LK Newspapers Viber Community

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஒன்பது எம்.பிக்களுக்கு கொரோனா

இதேவேளை, அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சாரதி துஷ்மந்த மற்றும் நாலக பண்டார கொட்டகொட ஆகியோர் கடந்த 22ஆம் திகதி தொற்றுக்குள்ளாகியிருந்தனர். ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன கடந்த 24ஆம் திகதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோகிலா ஹர்ஷனி குணவர்தன 23ஆம் திகதியும் தொற்றுக்குள்ளாகியிருந்தனர். அவர்களைத் தவிர, பொது பாதுகாப்பு அமைச்சரும் கட்சியின் உறுப்பினருமான ரியர் அட்மிரல் (ஓய்வு) சரத் வீரசேகரவுக்கும் கடந்தவாரம் தொற்று கண்டறியப்பட்டிருந்தது. இதேவேளை, தமிழ்த் தேசியக் கட்சியின் இராசமாணிக்கம் சாணக்கியன் எம்.பிக்கு கடந்தவாரம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு

கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர், விவசாயத்துறை அமைச்சால் வழங்கப்பட்ட 4 வகையான சேதன பசளை மற்றும் சேதன திரவ உரம் ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தியவர்களுக்கு மாத்திரம் நட்டஈடு வழங்கப்படும் என்ற வரையறை கிடையாது. நெற்பயிர்ச்செய்கையில் ஈடுப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நட்டஈடு வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்.

அத்துடன், நெல்லுக்கான நிர்ணய விலையை 75ரூபாயாக அதிகரிக்க அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது எனத் தெரிவித்த அவர், நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபை ஊடாக இனி ஒரு கிலோகிராம் நெல் 75 ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்படும் என்றார். நெல்லுக்கான உத்தரவாத விலை அதிகரிக்கப்பட்டதை தொடர்ந்து அரிசியின் விற்பனை விலை அதிகரிக்கப்படமாட்டாது எனவும் தெரிவித்தார்.

சந்தையில் அரிசியின் விலையை அதிகரித்து நெருக்கடி நிலைமையினை ஏற்படுத்த அரிசி மாபியாக்கள் முன்னெடுத்த சூழ்ச்சியை தடுப்பதற்கும், அரிசியின் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கும் அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது என தெரிவித்த அவர், நாட்டில் எக்காரணிகளுக்காகவும் அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்படாது என்றார்.

# உத்தரவாத விலையை ஏற்க தயாரில்லை

ஜனாதிபதி, அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் அரசாங்கம், விவசாய சமூகத்துக்கு ஏற்பட்ட அனைத்து இழப்புகளின் பின்னரும் உத்தரவாத விலையை முன்மொழிவது நியாயமானதல்ல என்று குறிப்பிட்டார்.

விவசாயிகளுக்கு உரிய உரத்தைப் பயன்படுத்தி ஒரு கிலோகிராம் நெல் உற்பத்தி செய்வதற்கு ரூ.20 அதிகமாக செலவாகும் என்றும் விவசாயிகள் ஒரு மூட்டை உரத்தை ரூ.15,000 முதல் ரூ.20,000க்கு வாங்குகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஒரு கிலோ கிராம் நெல் உற்பத்திச் செலவு 75 ரூபாய்க்கு அதிகமாக உள்ளதால், ஒரு கிலோ நெல்லின் விலை 100 ரூபாயாக அதிகரித்துள்ளது என்றார்.

விவசாயிகளுக்கு நியாயமான தீர்வை வழங்குமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்திய அவர், அரிசியின் விலை அதிகரிக்காமல், நுகர்வோருக்கு சுமையை ஏற்படுத்தாமல் பார்த்துக் கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றார்.

2020 பெரும் போகத்தில் சேதமடைந்த பயிர்களுக்கு 40 பில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்குவது தொடர்பில் தெரிவித்த அவர், நெல் விவசாயிகளுக்கு மாத்திரமன்றி உர நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நட்டஈடு வழங்கப்பட வேண்டுமென தெரிவித்தார்.

# பூஸ்டர் டோஸை ஏற்றிக்கொள்ளவும்

சிலர் பரப்பும் தவறான தகவல்கள் மற்றும் கருத்துகளால் பலர் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதில் தயக்கம் காட்டுகின்றனர் என தெரிவித்தார்.

அரசாங்கத்தகவல் திணைக்களத்தில் நேற்று (25) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், சமூகம், சுற்றாடல் மற்றும் பொருளாதார பிரச்சினைகளுக்கு மீண்டும் நாட்டை திறக்காமல் இருக்க வேண்டுமென்றால் அனைவரும் தமது கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில், நாட்டில் 98 சதவீதமானவர்களுக்கு கொரோனா முதல் தடுப்பூசி தடுப்பூசியும் அதற்கு சமனான வகையில் இரண்டாவது தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது.

ஆனால், நாட்டில் இதுவரை பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாதவர்கள், மூன்றாவது டோஸை விரைவில் எடுத்து நல்ல ஆரோக்கியத்தைப் பேணுமாறு கேட்டுக் கொண்டார்.

# சீன அரசியை உண்டால் சிறுநீரகத்தை பாதிக்கும்

அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்க மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

சீனாவில் அதிகளவான இரசாயன உரங்கள் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்படுவதாகவும் தரமற்ற உணவை உட்கொள்வதால் சிறுநீரக நோய்கள் ஏற்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையில் நாளாந்தம் 6.5 மில்லியன் கிலோ கிராம் அரிசி நுகரப்படும் அதேவேளை 3.5 மில்லியன் பாணும் நாளாந்தம் உட்கொள்ளப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

ஒருஹெக்டேர்செய்கைக்கு137கிலோ யூரியா உரம் பயன்படுத்தப்படுகிறது எனவும் சீனா 500 கிலோ கிராம் உரத்தைப் பயன்படுத்துகிறது எனவும் குறிப்பிட்டார்.

இரசாயன உரத்தை 3-4 மடங்கு அதிகமாக பயன்படுத்தும் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி பாவனைக்கு பாதுகாப்பானதா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# சிரேஷ்ட பேச்சாளராக அஜித் ரோஹண நியமனம்

## பேச்சாளராக நிஹால் தொடர்வார்



சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம், நேற்று (25) அறிவித்தது.

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண, பொலிஸ் ஊடகப் பேச்சாளராக கடமையாற்றியிருந்த நிலையில், அவரின் பதவிக்கு நிஹால் தல்துவ நியமிக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து குற்றங்கள் மற்றும் போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராக அஜித் ரோஹண நியமிக்கப்பட்டதுடன், புகையிலை மற்றும் மதுபானங்கள் தொடர்பான தேசிய அதிகாரசபையின் உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.

சிரேஷ்ட பேச்சாளராக அவர் நியமிக்கப்பட்டிருந்தாலும், பொலிஸ் ஊடகப் பேச்சாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தொடர்ந்தும் செயற்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கெங்கல்ல பாடசாலைக்குப் பூட்டு

அவ்விரு வகுப்புகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். குண்டசாலை பொதுமக்கள் பாதுகாப்பு பரிசோதனை காரியாலயத்தின் ஊடாக, அவ்விரு வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் கற்பித்த ஆசிரியர்களுக்கு அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அதனூடாகவே கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

# மின்வெட்டு யோசனை நாளை பரிசீலனை

இது தொடர்பில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு தற்போதுள்ள எரிபொருட்களின் இருப்புக்கள் தொடர்பாகவும் அவற்றை மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கக்கூடிய திகதிகள் பற்றிய தகவல்களை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

இம்மாத இறுதிக்குள் இலங்கைக்கு கச்சா எண்ணெய் கையிருப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகு எரிபொருள் மற்றும் நாப்தா மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். மின் உற்பத்தி நிலையங்களுக்கு தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வரும் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் 3ஆம் அலகு இம்மாத இறுதிக்குள் மீண்டும் மின் உற்பத்தியை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, தடையற்ற மின்சார விநியோகத்தை வழங்க முடியும் என ஆணைக்குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

மேலும், நிலக்கரி மற்றும் பிற எரிபொருட்களை இறக்குமதி செய்வதற்கு தேவையான அந்நிய செலாவணியை எவ்வாறு கண்டுபிடிப்பது என்பது குறித்து இலங்கை மத்திய வங்கியின் ஆளுநருடன் கலந்துரையாடினோம்.

எதிர்காலத்தில் இந்த அன்னியச் செலாவணி பிரச்சனையும் தீர்க்கப்படும் என நம்புகிறோம்.

இதேவேளை, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சார நெருக்கடிக்கு குறுகிய மற்றும் நடுத்தர கால தீர்வுகள் பலவற்றை பரிந்துரைத்துள்ளது.

மின்சார நுகர்வோரின் ஆதரவுடன் துரிதப்படுத்தப்பட்ட மின் பாதுகாப்பு திட்டத்தின் மூலம் மின்சாரத்திற்கான தேவையை குறைப்பது குறுகிய கால திட்டங்களில் ஒன்றாகும்.

மேலும், மத்திய கால தீர்வாக அரசு மற்றும் தனியார் துறை மின் உற்பத்தியாளர்களை திறம்பட பயன்படுத்த ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு நிறுவனங்கள் 3000 மெகாவோட்டுக்கும் அதிகமான மின் உற்பத்தித்திறன் கொண்ட ஜெனரேட்டர்களைப் பயன்படுத்துகின்றன, மின் பற்றாக்குறை ஏற்பட்டால், அந்த ஜெனரேட்டர்களில் இருந்து திறன்வாய்ந்த மின் உற்பத்தியை வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்படும்.

மேலும், எதிர்காலத்தில் இதுபோன்ற ஜெனரேட்டர்களை தேசிய மின் கட்டமைப்புடன் இணைப்பது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவும் சூரிய மற்றும் காற்றாலை மின்சக்தி அமைப்புகளை விரைவில் நிறுவுமாறு பரிந்துரைத்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒத்திவைக்கப்பட்ட சிறை

குறிப்பாக, 2009ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் 2009 மே 18ஆம் திகதிக்கு உட்பட்ட காலப்பகுதிக்குள் தடை செய்யப்பட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டமை தொடர்பாக குறித்த வழக்கு தொடரப்பட்டது.

2006ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பயங்கரவாதம் மற்றும் குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாடுகளைத் தடுத்தல் விதிகளின் கீழ் தண்டனை விதிக்கப்படக் கூடிய குற்றத்தைப் புரிந்துள்ளதாக, வவுனியா மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் 19ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்றுவந்த நிலையில், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று (25) விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

வழக்கில் தயா மாஸ்டர் மற்றும் அவர் சார்பாக சட்டத்தரணி எம்.எ.சுமந்திரன் ஆஜராகியிருந்தார்.

குறித்த வழக்கில் தயா மாஸ்டருக்கு கட்டாய சிறைத்தண்டனை வழங்கவேண்டிய பிரிவுகளின் அடிப்படையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

அந்தக் குற்றப்பத்திரிகை திருத்தப்பட்டு, குறைந்த குற்றச்சாட்டுக்கள் மாத்திரம் அவர் மீது முன்வைக்கப்பட்டிருந்தன. அதன்படி, அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, அவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

# குழாய் நீரை சிக்கனமாக பயன்படுத்தவும்

குடிநீருக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மலைப் பகுதிகளில் உள்ள நுகர்வோருக்கு குறைந்த அழுத்தத்தில் தண்ணீர் வழங்கப்பட வேண்டும் என்று சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டில் நிலவும் மழையின்றிய வரட்சியான காலநிலையின் காரணமாகவே நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருகிறது. இதன் காரணத்தில் நீர் மின் உற்பத்தி நிலையங்களுக்கு தேவையான நீரை வழங்க முடியாமை மற்றும் நாட்டில் நிலவும் எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மின்பிறப்பாக்கிகளின் செயலிழப்பினால் இலங்கையின் மின் நெருக்கடியும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார நிறுவனங்கள் மேம்படுத்தப்படும்

ரமேஷ்வரன், மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.பி.சக்திவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுடன் அண்மையில் நாம் பேச்சு நடத்தியிருந்தோம். இதன்போது பல கோரிக்கைகளை முன்வைத்தோம். அதில் பிரதானமாக பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள சுகாதார நிறுவனங்களை அரசு பொறுப்பேற்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தோம். அந்தவகையில் இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல முன்வைத்திருந்த நிலையில் அதற்கு நேற்று அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோருக்கு எமது மக்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள சுகாதார நிறுவனங்கள் முறையாக இயங்கவில்லை. உட்கட்டமைப்பு வசதிகளும் உரிய வகையில் இல்லை. இந்நிலையில் 450 சுகாதார நிறுவனங்களில் முதற்கட்டமாக 59 ஐ அரசு பொறுப்பேற்று, நிர்வகிக்கவுள்ளது. இதன்மூலம் எமது மக்களுக்கு உரிய சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். எஞ்சிய சுகாதார நிறுவனங்களையும் அரசு விரைவில் பொறுப்பேற்கும் என்றார்.

இதேவேளை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப் பதவிக்கு புதியவர் இன்னும் நியமிக்கப்படாமல் இருப்பது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டபோது, "விரைவில் தேசிய சபைக் கூட்டப்படும். அக்கூட்டத்தில் இது தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும்" என்று பதிலளித்தார்.

## பொரளை தேவாலய கைக்குண்டு

# விசாரணைகளை துரிதப்படுத்துமாறு குற்றத் தடுப்பு பிரிவுக்கு உத்தரவு

பொரளை அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பிலான விசாரணைகளை துரிதப்படுத்தி முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ராஜீந்திர ஜயசூரிய கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவுக்கு (சி.சி.டி), நேற்று (25) உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் சந்தேகநபர்களின் விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பில் பெப்ரவரி 2ஆம் திகதிமன்றுக்கு அறிவிக்குமாறும் சிசிடிக்கு, நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த முறைப்பாடு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குறித்த தேவாலயத்தின் ஊழியர் பிரான்சிஸ் முனீந்திரன் உள்ளிட்ட மூவர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரீஜென்சி அர்சகுலரத்ன, சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் விதம் சரியானதல்ல என குற்றம் சுமத்தினார்.

LK Newspapers Viber Community

கைப்பற்றப்பட்ட 300 கிலோ கிராம் ஹெரோய்ன்

# கொழும்புக்கு கொண்டு வரப்பட்டுள்ளது

இலங்கை கடற்படை, அரச புலனாய்வு சேவை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் இணைந்து, இலங்கைக்கு தென் கடலில், சர்வதேச கடல் எல்லையில் வைத்து கைப்பற்றிய 3,300 மில்லியன் ரூபாய்க்கும் அதிகம் பெறுமதியுடைய ஹெரோய், கொழும்பு துறைமுகத்துக்கு நேற்று (25) கொண்டு செல்லப்பட்டது.



இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஹெரோய்ன், டுபாயிலிருக்கும் போதைப்பொருள் வர்த்தகரான "ஹரக்கட்டா" என்பரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்பது விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டது.

மேலும், அந்த நடவடிக்கைகளுக்காக, மேலுமிருவரின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது.

தென் கடற்பரப்பில் வைத்து, இரண்டு டோலர் படகுகளில் கொண்டு வரப்பட்ட 300 கிலோகிராம் ஹெரோய்னுடன் 11 பேர், நேற்று முன்தினம் (24) சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவோர்

# தராதரமின்றி தண்டிக்கப்படுவர்

■ மொஹொமட் ஆஸிக்

நாட்டில் சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவோர் சாதாரண பாமர மக்கள் இன்றி, ஏதோவோர் அடிப்படையில் பலம் பொருந்தியவர்களாக உள்ளனர் எனத் தெரிவித்துள்ள சுற்றாடல்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, எனவே, சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்துபவர்களாக எத்தகைய தராதரம் கொண்டவர்களாக இருப்பினும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.



கண்டி மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு நில அதிர்வு தொடர்பாக ஒழுங்கு செய்யப்பட்ட செயலமர்வில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பணபலம் அல்லது அரசியல் பலம் பொருந்தியவர்களே அதிகமாக சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களில் ஈடுபடுவதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன் சில விடயங்களை அவதானிக்கும் போது அதில் சில உண்மைகள் இருப்பதுவும் தெரிய வந்துள்ளது.

இந்த நாட்டில் சகல மக்களும் சுற்றாடலை நேசிக்கும் நிலை ஏற்படும் வரை, சுற்றாடலைப் பாதுகாப்பது பாரிய சவாலாகவே இருக்கும். மரம் நடுவது அல்லது மரத்தை வெட்டுவது மட்டும் தான் சுற்றாடலுடன் தொடர்பு பட்ட விடயம் எனச் சிலர் நினைக்கின்றனர். இது தவறாகும்.

இலங்கையில் மிகவும் அமைதியாக வாழ்வதற்கு ஏற்ற காலநிலை கொண்ட ஓர் இடமாக கண்டியை நாம் நோக்குவதுண்டு. ஆனால் கண்டி நகரத்தை எடுத்துக் கொண்டால் இலங்கையில் அதிகளவு வாயு மாசடையும் ஓர் இடம் என்பதை விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்காலத்தில் கண்டி நகரில் இருப்பவர்கள் கொவிட் பிரச்சினை தீர்ந்தாலும் முகக்கவசம் அணிய வேண்டிய நிலை ஏற்படும் அளவுக்கு வாயு மாசடைவதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன. இதற்குக் காரணம் வாகன நெரிசலாகும்.

கண்டிக்கு அடுத்தபடியாக குருணாகல் நகரமும் இதேபோல்தான் உள்ளது. ஆனால் கொழும்பிற்கு அதிஷ்டவசமாக பக்கத்திலேயே கடல் இருப்பதால் பாரிய விளைவுகள் இல்லை என்றார்.

# மீனவர்களை ஏமாற்றிய முதலை

■ ரஸீன் ரஸ்மின்

முந்தல், சின்னப்பாடு, வென்னப்புவல கடற்பிரதேசத்தில் 7 அடி நீளமான முதலையொன்று, மீனவர் ஒருவரின் வலையில் சிக்கிய நிலையில் நேற்று முன்தினம் (24) மீட்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.



கடலில் இருந்து மீனவர்கள் வலையை கரையை நோக்கி இழுத்துக் கொண்டு வந்த போது, அந்த வலை பெரும் கனமாக காணப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

குறித்த மீன் வலை கரையை வந்தடைந்ததும் அந்த வலைக்குள் பெரிய மீன் ஒன்று சிக்கிவிட்டதாகவே தாம் முதலில் கருதியதாகவும் மீனவர்கள் கூறினர்.

எனினும், அந்த வலைக்குள் இருந்து 7அடி நீளமான முதலை இருப்பது பின்னர்தான் மீனவர்களால் கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இதுபற்றி ஆனவிழுந்தான் மற்றும் புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், மீனவர்களின் உதவியோடு குறித்த முதலையை பாதுகாப்பாக எடுத்துச் சென்றனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட குறித்த முதலையை வில்பத்து சரணாலய பகுதியில் விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இறால்களுக்கு உணவளித்தவர்

# தொட்டிக்குள் விழுந்து மரணம்

■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம், ஆனைவிழுந்தான் பகுதியிலுள்ள இறால் பண்ணை நீர் தொட்டிக்குள் விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



முந்தல், பத்துளுஓயா, மகாமாலிய பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த குறித்த நபர் இறால் பண்ணையில் இறால்களுக்கு காலை நேர உணவை வீசிக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், குறித்த நபர் இறால் பண்ணை நீர்த் தொட்டிக்குள் வீழ்ந்து கிடப்பதை அவதானித்த இறால் பண்ணையின் உரிமையாளர், இது தொடர்பாக ஆராச்சிகட்டுப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

குறித்த தகவலின் அடிப்படையில் அங்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

சட்டவிரோத மணல் அகழ்வு;

# ஒரு வருடத்தில் 610 வழக்குகள்

### ஒரு கோடிக்கு மேல் அபராதம் அறவீடு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் நிபந்தனைகளை மீறிய விதத்தில் மணல் கொண்டு சென்றமை என்பவற்றுக்கு எதிராக, கிளிநொச்சி மாவட்டத்தில் 610 வழக்குகள் கடந்தாண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நீதிமன்ற நடவடிக்கைகள் ஊடாக ஒரு கோடியே 98 இலட்சத்து 89,500 ரூபாய் அபராதம் அறவிடப்பட்டுள்ளதாகவும் அதேவேளை, 1,005 கியூப் மணல் அரச உடைமையாக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறுகின்ற சட்டரீதியற்ற மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி, பல்வேறு தரப்பினரும் தமது கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சாதனையாகிய சவால்கள்:

# குத்துச்சண்டையில் 'தங்கமங்கை' இந்துகாதேவி கூறுகின்றார்....



சுப்பிரமணியம் பாஸ்கரன்



"என்னைப் போன்ற ஏராளமானவர்கள் பல்வேறு துறைகளிலும் சாதிக்க ஆர்வமாக உள்ளனர்; ஆனால், அவர்களுக்கு நிதிப் பிரச்சினை; அவர்களுடைய குடும்பங்களின் பொருளாதாரப் பிரச்சினை என்பன, அவர்கள் சாதிப்பதற்குச் சவாலாக அமைகின்றன. சமூகத்தில் இத்தகைய திறமையாளர்களை இனங்கண்டு, அவர்களுடைய திறமைகளை வெளியுலகுக்குப் பகிரங்கப்படுத்தும் உதவிகளை செய்வதற்கு, பலரும் பாரபட்சமின்றி முன்வர வேண்டும்" என்று, குத்துச்சண்டை போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற கனேஸ் இந்துகாதேவி வேண்டுகோள்விடுத்துள்ளார்.

பாகிஸ்தான் நாட்டின் தலைநகர் லாகூர் நகரில் நடைபெற்ற சர்வதேச குத்துச்சண்டையில் 25 வயதுக்கு உட்பட்ட 50-55 கிலோ கிராம் எடைப் பிரிவில் நடைபெற்ற இறுதி போட்டியில், முல்லைத்தீவு மாணவி கனேஸ் இந்துகாதேவி, தங்கப்பதக்கம் பெற்று சாதனை படைத்து, முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் நாட்டுக்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு பிரதேசத்தில், புதியநகர் கிராமத்தில் வாழ்ந்துவரும் இவர், பெரும் சவால்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்து, இந்த வரலாற்றுச் சாதனையை நிலைநாட்டி உள்ளார். இந்தச் சாதனை மாணவியை பல்வேறு தரப்பினரும் வீடுதேடிச் சென்று பாராட்டி வருகின்றனர்.

இவரது வெற்றிக்கு பின்னால் உள்ள வலிகளும் வேதனைகளும் ஏராளம்; பாறையில் முளைத்த பயிர் போன்ற சூழ்நிலையிலேயே இவரது இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது என்பதை, அவரோடு உரையாடிய போது உணரமுடிந்தது.

ஏ-9 வீதியில் மாங்குளம் சந்தியிலிருந்து ஒட்டுசுட்டான் வீதியில் பயணிக்கும் போது, கரிப்பட்டமுறிப்பு என்ற கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கரிப்பட்டமுறிப்பு கிராமம் பண்டைய வரலாற்றுக் காலத்திலும் சரி, சமீபத்திய வரலாற்றுக் காலத்திலும் சரி, பல்வேறு வீரதீர சாதனைகள் படைத்த மண்ணாகத் திகழ்கின்றது.

அதாவது, முன்னைய காலத்தில் மிகவும் வலிமை கொண்ட ஓர் ஆண் யானையும் பெண் யானையும் இந்தப் பகுதியில் ஒற்றுமையாக வாழ்ந்து வந்ததாகவும் இதில் ஆண் யானை முதலில் இறந்து விட்டதாகவும் அதன் பின்னர் கவலையடைந்த பெண் யானையும் இறந்ததாகவும், ஆண் யானை இறந்த இடம் 'மணவாளன் பட்டமுறிப்பு' என்றும் பெண் யானை இறந்த இடம் 'கரிப்பட்ட முறிப்பு' என்றும் பெயர் வந்ததாக இந்தக் கிராமவாசிகள் கூறுகின்றனர். இப்படியான வரலாறு கொண்ட மண்ணில் இருந்துதான், தனது அயராத உழைப்பாலும் விடாமுயற்சியாலும் தோல்விகளையே வெற்றியின் படிக்கற்களாக்கிச் சாதனை படைத்த இந்துகாதேவி வாழ்ந்து வருகின்றார்.

இந்தக் கிராமத்தின் பிரதான வீதியிலிருந்து, ஏறத்தாள மூன்றரைக் கிலோ மீற்றர் தொலைவிலுள்ள புதிதாக உருவாக்கப்பட்ட புதியநகர் கிராமத்தில், இந்திய அரசின் நிதி உதவியுடன் உருவாக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் கனேஸ் இந்துகாதேவியும் அவரது தாயாரும் வசித்து வருகின்றனர்.





குத்துச் சண்டைப் போட்டியில் வெற்றி பெறும் வரையும், யாரும் அவர்களைக் கண்டு கொள்ளவில்லை; இன்று அவரைத் தேடி எத்தனையோ பேர் வந்து, வாழ்த்திச் செல்வதைக் காணமுடிகின்றது.

குன்றும் குழியும் செம்மண் புழுதியுமாக காணப்படுகின்ற வீதியூடாகச் சென்று, புதிய நகர் கிராமத்தின் அந்தத்தில் இந்துகாதேவியின் வீடு அமைந்துள்ளது. சிறுவயதில் தன்னுடைய தந்தையை இழந்து, தாயாரின் அரவணைப்பில் வளர்ந்த இந்துகா தேவி வறுமையிலும் சாதித்துக் காட்டியிருக்கிறார். தன்வீட்டிலிருந்து மூன்றரை கிலோ மீற்றர் கால்நடையாகச் சென்று, கரிப்பட்டமுறிப்பு சந்தியில் பஸ்ஸூக்காகப் பலமணிநேரம் காத்திருந்து, பயணம் செய்து, பயிற்சி பெற்று, இன்று இந்தச் சாதனையைப் படைத்திருப்பது பெரும்பாக்கியமாகும்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தை பூர்வீகமாகக் கொண்ட இவர், நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக இடம்பெயர்ந்து வவுனியா, சிதம்பரபுரத்தில் தங்கியிருந்தார். இவரது தந்தையார் விபத்தொன்றில் உயிரிழந்த நிலையில், இந்துகாதேவி சிறு குழந்தையாக இருக்கும் போதே தாயார் மத்திய கிழக்கு நாட்டுக்கு பணியின் நிமித்தம் சென்ற நிலையில், அவரது பேத்தியாருடன் சிறு பராயத்தை கழித்ததுடன் வவுனியா ஸ்ரீ நாகராஜா வித்தியாலயத்தில் தனது ஆரம்ப கல்வியை கற்றார்.

2013 ஆம் ஆண்டு, எட்டாம் தரத்தில் கரிப்பட்டமுறிப்பு பாடசாலையில் தன்னுடைய கல்வியைத் தொடர்ந்து, பின்னர் உயர்கல்வியை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் கற்றார்.

தனது வெற்றி தொடர்பில் அவர் மனந்திறந்து கூறும்போது;

"முதன்முதலில் சர்வதேச மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் கலந்து கொண்டு வெற்றி வைத்திருக்கின்றேன். இதற்கு நிறையவே கஸ்ரப்பட்டிருக்கின்றேன். நிதி உதவி கிடைக்காமல், அதற்காக நிறைய அரசியல்வாதிகளிடமும் பெரியவர்களிடமும் கதைத்திருந்தேன். எந்த உதவிகளும் கிடைக்கவில்லை.

கடைசியாக, இந்தப் போட்டிக்கு போவதில்லை என்ற முடிவு எடுத்திருந்தேன். கடைசி நேரத்தில், 13ஆம் திகதி பாகிஸ்தான் பயணிக்க வேண்டும். மூன்று இலட்சம் எவ்வளவோ சிரமப்பட்டுக் கட்டிய நிலையில், இன்னும் 90,000 ரூபாய் தேவை என்ற நிலை இருந்தது.

'சிறு துளி பெரு வெள்ளம்; உதவிடும் உறவுகளின் கவனத்துக்கு' என, வவுனியாவிலுள்ள 'தமிழ்விருட்சம்' அமைப்பின் நிறுவுநர் செல்வராஜா சந்திரகுமார் கண்ணன், தனது சமூக வலைத்தளத்தில் ஒரு வேண்டுகோளை விடுத்த நிலையில், இதனை ஏற்று, வவுனியா 93, 96 மகாவித்தியர்கள் நற்பணிமன்றம், இந்த நிதியுதவியை வழங்கி, போட்டிக்குச் சென்று, வெற்றி பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. அவர்களுக்கு என்றும் நான் சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துகின்றேன்; நன்றி கூறுகின்றேன்.

நான் போட்டிக்குப் போவதற்கு பணத்தேவைக்காக கேட்டபோது, எந்த உதவிகளையும் செய்யாது, எனக்கு கடைசிவரை உதவுவதாகத் தெரிவித்து, எதையும் செய்யாத அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி, பெரியவர்களாக இருந்தாலும் சரி இப்போது என்னைத் தேடி வருகின்றார்கள். என்னைப் போல் ஏராளமானவர்கள் சாதிக்க ஆர்வமுள்ளவர்களாக உள்ளார்கள். அவர்களுக்கு நிதி ஒரு பிரச்சினையாக உள்ளது. சமூகத்தில் சந்திக்கக்கூடிய பிரச்சினைகள் நிறையவே உள்ளன. அதை எல்லாம் தாண்டி, நாங்கள் முன்வரவேண்டும்" என்று நம்பிக்கையுடன் கூறியிருந்தார்.

இவரை போன்று பலர் சாதிக்க முனைந்தாலும், அவர்களது குடும்பங்களின் வறுமை, பொருளாதாரப் பிரச்சினை என்பன சவாலாக அமைகின்றன. சமூகத்தில் இவர்களை இனங்கண்டு, அவர்களுக்கான உதவிகளைச் செய்வதற்குப் பலரும் பாராபட்சமின்றி முன்வர வேண்டும்.





### பரீட்சைக் கடமைகளிலும்
# அரசியல் தலையீடு
## கேவலமான செயல் என்கிறார் இம்ரான் எம்.பி

ஹஸ்பர் ஏ ஹலீம், எப்.முபாரக், தீஷான் அஹமட்

சுயாதீனமாக செயற்பட வேண்டிய பரீட்சைக் கடமை நியமனங்களிலும் அரசியல் தலையீடு இடம்பெறுவது, இந்த அரசின் கேவலமான செயல்களில் ஒன்றாகும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

இது குறித்து ஊடகங்களுக்கு நேற்று (25) வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

"திருகோணமலை மாவட்டத்தில் 5ஆம் தர மற்றும் உயர்தரப் பரீட்சைக் கடமை நியமனங்களில் வழமைக்கு மாறாக இம்முறை பல புகார்களை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

"அதாவது, இந்தப் பரீட்சைக் கடமை நியமனங்களில் வழமையாகப் பின்பற்றப்பட்டு வந்த இனச் சமநிலை பின்பற்றப்பட வில்லை. குறிப்பாக, முஸ்லிம் அதிபர், ஆசிரியர்கள் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

"கிண்ணியா, மூதூர், தோப்பூர் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் புல்மோட்டை, கோமரங்கடவெல போன்ற தூரப் பிரதேசங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.



"வழமையாக வலயக் கல்விப் பணிப்பாளர்களால் வழங்கப்படும் பெயர் பட்டியல்களிலிருந்தே பரீட்சைக் கடமை நியமனங்கள் செய்யப்பட்டன. இவ்வாறு செய்தவதனூடாக சிரேஷ்டத்துவம், தகைமை என்பன கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கும். இம்முறை இந்த நிலை பின்பற்றப்படவில்லை. இதனால் முதலாந்தர அதிபர் ஆசிரியர்கள், உதவி மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். "வலயக் கல்விப் பணிப்பாளர்களின் பெயர் பட்டியலுக்கு வெளியே நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன. அரசியல் ரீதியாக வழங்கப்பட்ட பெயர்ப் பட்டியலிலிருந்தே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றன.

"நேர்மையாக நடக்கவேண்டிய பரீட்சைக் கடமைகளில் இவ்வாறான தலையீடுகளும், இன ரீதியான புறக்கணிப்புகளும் பரீட்சைத் திணைக்களத்தின் நம்பகத் தன்மை கேள்விக்குறியாகிவிடும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

### சட்டவிரோத மணல் அகழ்வால் இரணைமடு
# குளத்துக்கு ஆபத்து
## மிகப்பெரும் வளத்தை இழக்க முடியாது – அரச அதிபர்

மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி மாவட்டத்தின் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மணல் அகழ்வால், மாவட்டத்தில் இருக்கின்ற மிகப்பெரும் வளமான இரணைமடு குளத்துக்கு ஆபத்து ஏற்படுமென கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல், மாவட்ட அரச அதிபர் தலைமையில், மாவட்டச் செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் (24) பிற்பகல் நடைபெற்றது.

இதில் கருத்துரையாற்றிய அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில், "அதிகாரிகளாகிய நாங்கள் சில வருடங்களே இங்கு கடமையில் இருப்போம். ஆனால்,



இங்குள்ள சமூகமும் மக்களும் இப்பிரதேசத்திலேயே தொடர்ந்தும் இருக்கப் போகின்றார்கள்.

"சட்டவிரோத மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்புகளையும் வழங்க வேண்டும். குறிப்பாக, இரணைமடு குளத்தின் கீழ் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் எதிர்காலத்தில் பெரியதொரு வளத்தை நாங்கள் இழக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஆபத்துகளும் அழிவுகளும் அதிகமாக இருக்கும்.

"எனவே, சமூகத்தினுடைய ஒத்துழைப்பும் பங்களிப்பும் மிக மிக அவசியமானது. அந்த அடிப்படையிலேயே, குறிப்பாக முதற்கட்டமாக 5 இடங்களில் இராணுவக் காவலரண்களை அமைத்து அதன்மூலம் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு, இதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்றார்.

"அதற்கு கமக்காரர் அமைப்புகள் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன இடங்களை அடையாளப்படுத்தி, காவலரண்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வழங்க வேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### ஆன்மிக பயிற்சிநெறிகளுக்கு
# விண்ணப்பம் கோரல்

வி.ரி.சகாதேவராஜா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், காரைதீவில் அமைந்துள்ள இந்து சமய கலாசாரக் கற்கைகள் நிறுவக சுவாமி விபுலானந்தர் பயிற்சி நிலையத்தில், முதல்தடவையாக பல ஆன்மீக கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யோகாசனம், பண்ணிசை, பரத நாட்டியம், வயலின், மிருதங்கம் , கதாப்பிரசங்கம் மற்றும் பேச்சாற்றலை வளர்த்தல் என்பவற்றில் 06 மாத காலம் பயிற்சி அளிக்கப்படும்.

வார இறுதி நாள்களில் நடைபெறவிருக்கும் இப்பயிற்சிநெறிகள், பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. இந்து சமய அறநெறிப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆர்வலர்கள் இவற்றுக்கு விண்ணப்பிக்க முடியுமென இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அருளாநந்தம் உமாமகேஸ்வரன் தெரிவித்தார். மேலதிக விவரங்களுக்கு 0779309257 (கு.ஜெயராஜி) எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

### கொக்குவிலில்
# வீடொன்றின் மீது தாக்குதல்
## வாகனங்களுக்கும் தீ வைப்பு

வி.நிதர்ஷன்

யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில் உள்ள வீடொன்றினுள் புகுந்த வன்முறைக் கும்பல் ஒன்று, வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன், வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களுக்கும் தீ வைத்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கார் ஒன்று சேதமடைந்துள்ளதுடன், இரண்டு மோட்டார் சைக்கிள்கள் தீக்கிரையாகியுள்ளன.



கொக்குவில், நந்தாவில் அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் (24) இரவு, மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த ஆறுக்கும் மேற்பட்டவர்களை உள்ளடக்கிய வன்முறைக் கும்பலே, வீட்டினுள் புகுந்து, ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கி அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது.

இதன்போது, காருக்கு வைக்கப்பட்ட தீ பாரியளவில் பரவாத நிலையில், மோட்டார் சைக்கிள் இரண்டும் முற்றாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஓட்டோ சாரதி சடலமாக மீட்பு

வா.கிருஸ்ணா, கனகராசா சரவணன்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பார் வீதியில் ஓட்டோ சாரதியொருவர், நேற்று (25) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், ஓட்டோவும் சேதமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர், கறுவப்பங்கேணி, நாவலர் வீதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான 49 வயதுடைய மாசிலாமணி தர்மரெட்ணம் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.



கறுவப்பங்கேணியிலிருந்து மட்டக்களப்பு ரயில் நிலையத்துக்கு பயணிகளை ஏற்றுவதற்கு சென்ற நிலையிலேயே அவர் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

பொதுமக்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கட்டுத்துவக்கு வெடித்தது

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு - கருநாட்டுக்கேணி பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததில், 48 வயது குடும்பஸ்தர் ஒருவர் காலில் காயமடைந்த நிலையில், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி பகுதியில் நேற்று முன்தினம் (24) மாலை வயலுக்குச் சென்ற போதே, கட்டுத்துவக்கு வெடித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை, பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.



### கிழக்கு பட்டதாரி
# பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம்


எம்.எஸ்.எம்.ஹனீபா, ஏ.ஆர்.எம். றிபாஸ்

கிழக்கு மாகாண பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் வைபவம், திருகோணமலை - உவர்மலை விவேகானந்த கல்லூரி கேட்போர் கூடத்தில் இன்று புதன்கிழமை (26) நடைபெறவுள்ளது.

பட்டதாரிப் பயிலுநர்களாக இணைப்புச் செய்யப்பட்ட பட்டதாரிப் பயிலுனர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கி, கிழக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை தரம் IIIக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தால் சுமார் 500 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்படவுள்ளன.

நிரந்தர நியமனம் பெறும் பட்டதாரிப் பயிலுநர்களின் பெயர், விவரம் சகல பிரதேச செயலாளர்களுக்கும் கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) எச்.ஈ.எம். டபிள்யூ.ஜீ. திஸாநாயக்க கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.



### வலி. மேற்கு முன்பள்ளி
# ஆசிரியர்கள் கவனயீர்ப்பு

டி.விஜித்தா

வலி. மேற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு, நேற்று (25) ஆரம்பமானது. எனினும், இந்தக் கூட்டத்தை இடைநிறுத்திவிட்டு, பிரதேச சபை உறுப்பினர்களும் முன்பள்ளி ஆசிரியர்களும் ஒன்றிணைந்து, பிரதேச சபைக்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குமாறு கோரியும், சம்பள அதிகரிப்பை கோரியும் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



### மட்டு. முதல் கொழும்பு வரை
# அதிவேக சொகுசு ரயில் சேவை

க.விஜயரெத்தினம், எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு முதல் கொழும்பு வரையிலான அதிவேக குளிரூட்டப்பட்ட ரயில் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

பொலன்னறுவை - கொழும்பு கோட்டையில் இருந்தான நகரங்களுக்கிடையில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட 'புலதிசி' அதிவேக குளிரூட்டப்பட்ட ரயில் சேவை, போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் தீர்மானத்துக்கு அமைவாக விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதன்படி, இம்மாதம் 28ஆம் திகதி முதல் மட்டக்களப்பு - கொழும்பு 'புலதிசி' கடுகதி சேவையாக இடம்பெறவுள்ளது.

இந்த ரயில் சேவை, மட்டக்களப்பிலிருந்து அதிகாலை 01.30 மணிக்கு புறப்பட்டு, காலை 08.45 மணிக்கு கொழும்பு - கோட்டையை சென்றடையும்.

மீண்டும் பிற்பகல் 3.05 கொழும்பு - கோட்டையிலிருந்து புறப்பட்டு, இரவு 9.52க்கு மட்டக்களப்பு ரயில் நிலையத்தை வந்தடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



### குத்தகை விவகாரம்:
# சந்தைக்கு சேதம்
## மூவர் கைது

செ.கீதாஞ்சன்

முள்ளியவளை தண்ணீரூற்று பொதுச்சந்தைக்கு நேற்று முன்தினம் (24) இரவு வந்த நால்வர், அங்கிருந்த 60 வயது காவலாளியை தாக்கி, சந்தைக்கு சேதம் விளைவித்துள்ளனர்.

இதில், காலில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் காவலாளி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தையை குத்தகைக்கு எடுத்தமை தொடர்பில் எழுந்த பிரச்சினையின் விளைவாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கீழ் உள்ள முள்ளியவளை உப அலுவலகத்துக்குச் சொந்தமான பொதுச் சந்தையே இவ்வாறு சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முள்ளியவளை உப பிரதேச சபையின் பொறுப்பதிகாரி முறைப்பாடு செய்துள்ளார்.



இதனையடுத்து, சிசிடிவி கமெராவில் பதிவாகியுள்ள காட்சிகளின் அடிப்படையில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, காவலாளி தாக்கப்பட்டு, அரச சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளமைக்கு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் க.விஜிந்தன் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

LK Newspaper Viber Community

# விபத்தில் தீக்கிரையான மோட்டார் சைக்கிள்

■ ராமு தனராஜா



பசறை, கமேவெல 4ஆம் கட்டை பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் லொறியொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிள் முற்றாக தீப்பற்றி எரிந்துள்ளது.

நேற்று (25) காலை 8 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அத்துடன், மோட்டார் சைக்கிளை செலுத்திய நபர் கடுங் காயங்களுடன் பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

காயமடைந்த நபர், பசறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் என தெரிவித்துள்ள பசறை பொலிஸார், விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.



# ஹெரோய்னுடன் ஐவர் கைது

■ ரஞ்சித் ராஜபக்ஸ

ஹெரோய்ன் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஐவர், நேற்று முன்தினம் (24) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் தோட்டத்தைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் கலால் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய, மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே, 20-30 வயதுக்குட்பட்ட ஐவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், சந்தேகநபர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 'பதுலு புத்தக வசந்தம்'

# கண்காட்சி ஆரம்பம்

■ நடராஜா மலர்வேந்தன்



'பிறபுத்தக' கலாசார அறக்கட்டளை மற்றும் பதுளை மாநகர சபை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்யும் வருடாந்த 'பதுலு புத்தக வசந்தம்' பதுளை புத்தகக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு, பதுளை சேனநாயக்க பூங்காவில் நேற்று முன்தினம் (24) நடைபெற்றது.

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் ஆரம்பமான இந்த கண்காட்சி, எதிர்வரும் 30ஆம் திகதி வரை தினமும் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னணி புத்தக வெளியீட்டாளர்களின் பங்கேற்புடன் நடைபெறும் இந்தப் புத்தகக் கண்காட்சியில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான புத்தகங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, புத்தகங்களைக் கொள்வனவு செய்பவர்களுக்கு 20 சதவீத விசேட தள்ளுபடிகள் வழங்கப்படுகின்றமை விசேட அம்சமாகும்.



## பிரதான நீர்த்தேக்கங்களின்

# நீர்மட்டம் வெகுவாக குறைவடைந்தது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நீர் மின் உற்பத்தி செய்யப்படும் பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக குறைவடைந்து வருவதாக நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர் தெரிவித்தார்.

இதற்கமைய, 120 அடி உயரமான மவுசாக்கலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் தற்போது 80.9 அடியாக குறைவடைந்துள்ளது.

அத்துடன், 155 அடி உயரமான காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டமும் 134 அடியாக குறைவடைந்துள்ளது. மேலும், 82 அடி உயரமான லக்ஸ்பான நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 75.2 அடி குறைவடைந்துள்ளதுடன், 91 அடி உயரமான விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தின் நீரமட்டம் 86.8 அடியாக குறைவடைந்துள்ளது.

அதேவேளை, 55 அடி உயரமான கெனியன் நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 49.1 அடியாக குறைவடைந்துள்ளது.

இந்நிலையில், கெனியோன் நீர்மின் உற்பத்தி நிலையத்துக்கு நீரை கொண்டு செல்லும் சுரங்கப் பாதையின் புனரமைப்புப் பணிகள் காரணமாக, குறித்த மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி, தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

## போதைப் பொருள் பாவனையால்

# அசம்பாவிதங்கள் அதிகரிப்பு

மலையகத்தில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையால் ஆங்காங்கே பல அசம்பாவிதங்கள் அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றன என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.



பதுளை -வேவஸ்ஸை பகுதியில் 63 வயது மூதாட்டி ஒருவர், கற்பழித்து கொலை செய்யப்பட்டதால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது. இந்தச் சம்பவ இடத்துக்கு நேரில் சென்ற போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

மலையக பெருந்தோட்ட இளைஞர்களின் எதிர்கால வாழ்வை போதைப்பொருள் பாவனை, சூனியமாக மாற்றுகிறது.

அத்தோடு, பல்வேறு அசம்பாவித சம்பவங்கள் அங்கே அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, உடனடியாக இவை அனைத்துக்கும் முற்றுப்புள்ளி இடப்பட வேண்டும் என்றார்.

குறித்த மூதாட்டி கொலை செய்யப்பட்ட வீதியூடாக மாணவர்கள் உள்ளிட்டவர்கள் பயணிப்பதால், உடனடியாக அவர்களுக்குரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றார்.

இந்த வீதியில் வெளி ஆட்களின் நடமாட்டத்தை தடுப்பதோடு, வெளியாட்கள் தோட்டங்களுக்கு உட்புகுந்து சட்டவிரோதமாக போதைப்பொருள் பாவனையை மேற்கொள்வதை முற்றுமுழுதாக நிறுத்த தோட்ட அதிகாரியின் ஒத்துழைப்பு வேண்டுமென வலியுறுத்தினார்.

மேலும், இச்சம்பவத்துக்கு காரணமானவர்கள் உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று அழுத்தமான பணிப்புரையை விடுத்தார். அத்துடன், அது தொடர்பில் உறுதிமொழியை பொலிஸ் அதிகாரிகளும் வழங்கியுள்ளார்கள் என்றார்.

# பொங்கல் விழா...







மாத்தளை கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயத்தின் பொங்கல் விழா, பாடசாலை அதிபர் தியாகராஜா தலைமையில் நேற்று (25) நடைபெற்றது. இந்த நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## உத்தியோகத்தர்களின் முறைகேடான செயற்பாடுகளால்

# மாணவர்கள் நம்பிக்கையை இழந்துள்ளனர்

■ துவாரகேஷான்

நாடளாவிய ரீதியில் இந்த மாதம் 22ஆம் திகதி நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில், சில பரீட்சை நிலையங்களில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களின் முறைகேடான செயற்பாடுகள் காரணமாக, மாணவர்கள் பரீட்சை மீது நம்பிக்கை இழந்துள்ளனர் என தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.பாலசேகரம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



தொடர்ந்து தெரிவித்த அவர்,

மாணவர்கள் மன உளைச்சலுக்கும் உள்ளாகியுள்ளனர். மேலும் பரீட்சைக் கடமைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் ஒரு சிலரின் இவ்வாறான செயற்பாடு ஏனைய உத்தியோகத்தர்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

பரீட்சைக்கு தங்களைத் தயார் படுத்திக் கொள்வதற்கு பாரிய சவாலாகவே காணப்பட்டது. இவ்வாறான நிலையில் பரீட்சைக்குத் தோற்றிய போது ஒரு சில பரீட்சை நிலையங்களில் சில பரீட்சை உத்தியோகத்தர்கள் பரீட்சை நடைபெறும் வகுப்பறையில் சில மாணவர்களுக்கு விடைகளை சொல்லிக் கொடுத்ததாக தகவல் வெளியாகியுள்ளன. இச்செயற்பாடு ஏனைய மாணவர்களுக்கு அநீதியாகவே அமைகின்றது என்றார்.

## சுது கங்கைக்கு நீராடச் சென்ற

# இளைஞன் மாயம்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

தனது நண்பருடன் மாத்தளை- சுதுகங்கைக்கு நீராடச் சென்ற 17 வயது இளைஞன் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

இந்தச் சம்பவம், நேற்று முன்தினம் (24) மாலை இடம்பெற்றுள்ளது.

மாத்தளை- களுதாவளை பிரதேசத்தில் வர்ணபூச்சு வேலைக்குச் சென்றிருந்த குறித்த இளைஞன், அந்தப் பணிகள் நிறைவடைந்ததும் தனது நண்பருடன் சுதுகங்கைக்கு நீராடச் சென்று காணாமல் போயுள்ளார்.

இவ்வாறு நீரில் மூழ்கி காணாமல் போன இளைஞன், மாத்தளை- உன்னஸ்கிரிய புதிய நாகல பகுதியைச் சேர்ந்த பிள்ளைநாதன் தில்ஷான் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காணாமல் போன இளைஞனை தேடும் பணிகள் நேற்று (25) வரை முன்னெடுக்கப்பட்டன எனத் தெரிவித்த மாத்தளை பொலிஸார், அவ்விளைஞன் தொடர்பிலான தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை என்றனர்.

## இராகலை தீ விவகாரம்

# வழக்கு மாற்றப்பட்டது

■ ஆ.ரமேஸ்

ஐந்து உயிர்களை காவு கொண்ட இராகலை தீ பரவல் தொடர்பான வழக்கு விசாரணை, நுவரெலியா மேல் நீதிமன்றத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இராகலை தோட்டம் இலக்கம் ஒன்று மத்திய பிரிவு தோட்டத்தில் உள்ள வீடொன்றில், 2021 ஒக்டோபர் 7ஆம் திகதி இரவு 10.15 மணியளவில் தீ பரவியது.

இச்சம்பவம் தொடர்பான வழக்கின் ஒன்பதாவது தவணை விசாரணை, வலப்பனை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (24) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகநபரை மன்றில் ஆஜர்படுத்தாத நிலையில் சந்தேகநபருடன் "ஸ்கைப் "தொழில்நுட்பம் ஊடாக விசாரணையை முன்னெடுத்த நீதவான், வழக்கை நுவரெலியா மேல் நீதிமன்றுக்கு மாற்றுவதாக தெரிவித்து, எதிர்வரும் 7ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்தார்.

## சுரங்கத் தொழில்களுக்கான அனுமதிப்பத்திரங்களை

# இணையம் ஊடாக விநியோகிக்க நடவடிக்கை



■ மொஹொமட் ஆஸிக்

கனிய வள மற்றும் சுரங்கத் கைத்தொழில்கள் தொடர்பான அனுமதிப் பத்திரங்களை இணையம் ஊடாக பெற்றுக்கொள்ள சுற்றாடல் அமைச்சு, நடவடிக்கை எடுத்துள்ளதாக சுற்றாடல் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் சச்சிந்ர சில்வா தெரிவித்தார்.

கண்டியில், ஊடகவியலாளர்களுக்கு நடத்தப்பட்ட செயலமர்வில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அவர், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

கனிய வளங்கள், மணல், மண், கருங்கற்கள் போன்ற பல விடயங்கள் சுற்றாடல் அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. இதில் கனிய வளங்கள் என்பது ஒருபோதும் மீளப்பெற முடியாதவை.

எனவே, அவற்றை முறையாக முகாமைத்துவம் செய்யா விட்டால் அவை ஒருகாலத்தில் அழிந்து போகலாம். அப்படியான நிலை ஏற்படின் கனிய வளங்களுடன் தொடர்புடைய கைத் தொழில்கள் இல்லாது போகலாம்.

அதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் தொழில்களை இழக்கவும் நேரிடும். குறைந்தளவு ஊழியர்களைக் கொண்டு நாம் பணியாற்றும் காரணத்தால் சில வேளைகளில் அனுமதிப்பத்திரங்களுக்கு காலதாமதம் ஏற்படுகிறது.

எனவே 'ஒன்லைன்' முறைமையில் அவற்றைப் பெற்றுக்கொள்ள வசதிகளை செய்துள்ளோம். எதிர்காலத்தில் அதனை இன்னும் விரிவுபடுத்தி அனுமதிப்பத்திரங்கள் கூரியர் சேவையூடாக இல்லங்கள் தோறும் வந்தடைய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

LK Newspapers Viber Community

# ஓர் அகப்பையில் பகிர்வதை அரசாங்கம் வழக்கப்படுத்துவது அவசியம்

ஒவ்வொரு தேர்தல்களிலும் எக்கட்சிக்கு, யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்பதில் வாக்காளர்கள் மிகத் தெளிவாக இருக்கின்றனர். அதனால்தான், ஆட்சி மாற்றம் ஏற்படுகின்றது. அத்துடன், தமது பிரதேசங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதிலும் கைதேர்ந்தவர்களாக வாக்காளர்கள் இருக்கின்றனர். தேர்தல்கள் நடத்தப்படாமல் இருப்பதுதான், ஜனநாயகத்தை கேள்விக்கு உட்படுத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இன்னுமொரு வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் போடப்பட்டிருக்கும் முடிச்சை அவிழ்க்கவேண்டும். பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதி தேர்தல்களுக்கு இன்னும் காலமிருக்கிறது.

அத்தேர்தல்களில் ஆட்சி மாறலாம்; ஜனாதிபதி மாறலாம். தங்களுக்கு வாக்களிக்காதவர்கள் இருக்கலாம். அவர்களை இன,மொழி, ரீதியில் பாகுபாடுகள் காட்டாமல், 'நமது நாட்டு மக்கள்' எனச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், வெளிப்படையாகவும் அப்பட்டமாகவும் ஏன், மறைமுகமாகவும் கூட, பெரும்பான்மை இன மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் என்பதைக் காட்டிக்கொண்டுதான் இருக்கிறது. நாட்டின் பெயருக்குக் கீர்த்தி, ஏற்படுத்திக்கொடுப்போரை சம அந்தஸ்துடன் கௌரவித்திருக்க வேண்டும். அதில், அரசாங்கம் தவறிநிற்கின்றது. தான் பாடியதன் ஊடாக, சர்வதேச ரீதியில் மக்களின் கவனத்தை ஈர்த்த, யொஹானி டி சில்வாவுக்கு காணித்துண்டொன்று வழங்கப்பட்டுள்ளது. அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை பிரதமரே சமர்ப்பித்து, அங்கிகாரத்தைப் பெற்றுக்கொடுத்திருந்தார்.

யொஹானிக்கு காணித்துண்டை வழங்கியதில் தவறில்லை. ஆனால், பாகிஸ்தானில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில், தன்னுடைய முழுத்திறமையையும் காண்பித்த, முல்லைத்தீவு, ஒட்டிச்சுட்டான் கரிப்பட்டமுறிப்பைச் சேர்ந்த கணேஷ் இந்துகாதேவிக்கும், அரசாங்கம் கௌரவமளித்திருக்க வேண்டும்.

தந்தையை இழந்து, தாயின் அரவணைப்பில், நாட்டுக்காக தங்கப்புகழ் தேடித்தந்திருக்கும், இந்துகாதேவியின் கடந்தகாலப் பயணம் கடினமானவை; வெற்றிவாகை சூடியதன் பின்னர், பலரும் ஆதரவுக்கரங்களை நீட்டிக்கொண்டிருக்கின்றனர். அதனை மனமுவர்ந்து வரவேற்கவேண்டும். போட்டியில் பங்கேற்க உதவிய நல்லுள்ளங்களையும் மறந்துவிடக்கூடாது.

இந்துகாதேவியைப் போல, வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட நாட்டின் நாலாப்புறங்களிலும் திறமையானவர்கள் மூலை முடுக்கெல்லாம் மறைந்திருக்கலாம். அவ்வாறானவர்களை இனங்காண வேண்டியது, விளையாட்டுத்துறை அமைச்சின் பொறுப்பாகும்.

பொது அமைப்புகள் சில உதவியிருக்காவிடின், தங்கப்பதக்கத்தை வென்றிருக்க முடியாதென, இந்துகாதேவி தெரிவித்திருக்கின்றார். ஆகையால், திறமையான வீர, வீராங்கனைகளை இனங்கண்டு, அவர்களுக்கு ஊக்கமளித்து, சர்வதேச களங்களுக்குச் கொண்டு செல்வது விடயதானங்களுக்குப் பொறுப்பானவர்களின் பொறுப்பாகும்.

நாட்டுக்கு கீர்த்தி, புகழ், என்பவற்றைத் தேடிக்கொடுத்ததன் பின்னர், இன,மொழி, மத ரீதியில் வேறுபடுத்திப் பார்க்காமல், ஓர் அகப்பையில் பகிர வேண்டும். அதற்கு அரசாங்கத்துக்குள் இருக்கும் சிறுபான்மையின மக்கள் பிரதிநிதிகள் அழுத்தம் கொடுக்கவேண்டும். அதனூடாகவே, எதிர்காலங்களில் இந்துகாதேவி போன்ற வீராங்கனைகளை உருவாக்க முடியும் என்பதை நினைவூட்டுகின்றோம்.


# தமிழ்Mirror க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

உங்கள் உருவத்தை நேசித்துக் கொள்ளுங்கள். அத்துடன், இதயத்தைத் தவறான எண்ணங்களுக்குள் உள்நுழைத்துக் கொள்ளாதீர்கள்.

காட்சிகள் மாறும்; மனதில் கிலேசம் வேண்டாம். எல்லாமே புதிதாகவும் மாறுபாடாகவும் தோன்றலாம். அறிவோடு உறவாடு! உன்னையே நீ நம்பாமல், எதைச் சாதிக்கப்போகின்றாய்?

நீ வல்லவன் என்பதை உறுதியுடன் ஏற்றுக்கொள்வதுடன், அவ்வண்ணமே செயலிலும் துணிவை இணைத்திடு!

மனிதனில், எதிர்மறை எண்ணங்கள் சலனத்தை ஏற்படுத்தி விடுகின்றன. தீர்மானங்களை எடுக்கும்போது, பலவீனமான நபர்களிடம் ஆலோசனை கேட்பது, தன்னைத்தானே ஏமாற்றி, தனக்குத்தான் தாக்குதல் நடத்துவதுபோலாகும்.

ஒரு சிலர் இரட்டை வாழ்க்கை வாழ்கின்றனர். அதாவது, வேடத்தை மாற்றிக்கொண்டு, தங்களையே ஏமாற்றுகின்றார்கள். பொறாமை, மனக்குமுறல் போன்ற தேவையற்ற வியாதிகளால், வேண்டத்தகாத பிரச்சினைகளை உருவாக்குவதுபோல மடமை வேறில்லை.

எவரையும் பகைப்பதால், நீங்கள் வீரர்களாக முடியாது. அன்பைப் பகிர்ந்து கொள்வதை இயல்பாக்கிக் கொண்டால், எல்லா சௌக்கியங்களும் தேடிவரும். வாழ்க்கையை இரசிக்கவும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

செலாவணித் தட்டுப்பாடு:

# 1970களிலும் பஞ்சத்தில் மூழ்கடித்தது



எம்.எஸ்.எம். ஐயூப்

மின்சார விநியோகத்தைத் தடையின்றி நடத்திச் செல்ல, மின்வெட்டைத் தவிர வேறு வழியே, அரசாங்கத்துக்கு இல்லை என்று தான் தெரிகிறது. மின்சாரத்தோடு சகலதும் சம்பந்தப்பட்டு இருக்கும் நிலையில், மின்வெட்டுத் தொடர்ந்தால், நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையில், சகல நடவடிக்கைகளும் பாதிக்கப்படுவதைத் தடுக்க முடியாமல் போய்விடும்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரை விட இன்று, வாழ்க்கையின் ஒவ்வோர் அசைவையும் கட்டுப்படுத்தும் ஆற்றல்மிக்கதாக மின்சாரம் மாறியுள்ளது. அக்காலத்தில், நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் கிணறுகள், ஆறுகள், வாவிகளில் இருந்தே மக்கள் நீரைப் பெற்றுக் கொண்டனர்.

கொழும்பு போன்ற நகரங்களிலும் பல இடங்களில் கிணறுகள் இருந்தன. இன்று கிராமங்களிலும் குழாய் மூலமே குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, மின்சாரம் தடைப்பட்டால் குடிநீரும் இல்லாமல் போகும் ஆபத்தே நிலவுகிறது.

அக்காலத்தில், நாட்டில் பெரும்பாலான விடுகளில் மண்ணெண்ணெய் விளக்குகளே பாவனையில் இருந்தன. ஆனால், இன்று மின்குமிழிகள் இல்லாத வீடுகளே இல்லை. தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள் மட்டுமன்றி, அலைப்பேசியும் ஏழைக் குடும்பங்களிலும் அத்தியாவசியப் பொருட்களாகியுள்ளன. இவையும் மின்சக்தி மூலமே இயங்குகின்றன.

தற்போது, நாட்டில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு நிலவுகிறது. அத்தோடு மண்ணெண்ணெய்க்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. அதற்குப் பரிகாரமாகப் பலரும் மின்சார உபகரணங்களையே பாவிக்க முற்பட்டனர். எனவே, ஒரு வாரம் மின்சாரம் இல்லாமல் போனால், மனித செயற்பாடுகள் ஸ்தம்பித்துவிடும் என்றே கூறவேண்டும். அவ்வாறான நிலை ஏற்பட்டால், மக்கள் என்ன செய்வார்கள் என்பதை, சிறிதும் எண்ணிப் பார்க்க முடியாது.

ஆனால், தற்போதைய நிலையில் இவ்வாறானதொரு நிலை ஏற்படாது என்பதற்கு, எவ்வித உத்தரவாதமும் இல்லை. ஏனெனில், அரசாங்கம் பெரும் வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளது.

கடந்த பல தசாப்தங்களாக, வெளிநாடுகளில் இருந்து பெற்ற கடனைச் செலுத்துவதே, பெரும்பாடாக இருக்கிறது. அரசாங்கத்துக்கு உள்நாட்டு நாணய நோட்டுகளைப் போல், டொலர் நோட்டுகளை அச்சிட முடியாது.

இது போன்றதொரு மோசமான வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினையை, இலங்கை 50 ஆண்டுகளுக்கு முன்னர் எதிர்நோக்கியது. அப்போது, சிறிமாவோ பண்டாரநாயக்கவே பிரதமராக இருந்தார். அக்காலத்தில், ஜனாதிபதி பதவியானது பெயரளவிலான பதவியாகவே இருந்தது.

அந்தப் பெருளாதார நெருக்கடியின் போது, அரசாங்கம் அதைச் சமாளிக்க மேற்கொண்ட நடவடிக்கைகள், தற்போதைய இளம் தலைமுறையினருக்குத் தெரியாது. அக்காலத்தில் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்களே நாட்டின் பிரதான வெளிநாட்டு வருமானத்தைச் சம்பாதித்துக் கொடுத்த பொருட்களாக இருந்தன.

வெளிநாட்டுத் தொழில்கள், ஆடைத் தொழிற்றுறை என்பன அதற்குப் பின்னரே ஆரம்பிக்கப்பட்டன. அக்காலத்தில், உல்லாசப் பிரயாணத்துறையானது பொருட்படுத்தக் கூடிய அளவில் வளர்ச்சியடைந்து இருக்கவில்லை. எனவே, வெளிநாட்டு செலாவணி மூலமான வருமானம் வளர்ச்சியடையாது, தேங்கிய நிலையில் தான் இருந்தது.

நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து நாட்டின் தேவைகள் வருடாவருடம் பெருகி வந்த போதிலும், அதற்கு அமைய நாட்டின் அபிவிருத்தி இடம்பெறவில்லை. எனவே, பெரும்பாலான பொருட்கள், வெளிநாடுகளில் இருந்தே பெறவேண்டிய நிலை ஏற்பட்டு இருந்தது. எனவே, வருடாவருடம் வெளிநாட்டு வருமானம் குறைந்து வந்து, 1970ஆம் ஆண்டளவில் அது உச்சக்கட்டத்தை அடைந்தது.

சிறிமாவோவின் அரசாங்கம் செய்வதறியாது தவித்தது. அப்போது, அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் பதவிகளை இடதுசாரித் தலைவர்களான என். எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, லெஸ்லி குணவர்தன போன்றவர்களே வகித்தனர். 1970ஆம் ஆண்டு முதல் 1975ஆம் ஆண்டு வரை, என்.எம். பெரேராவே நிதி அமைச்சராக இருந்தார். அவர்கள், பிரச்சினைக்குத் தீர்வாக கடும் இறக்குமதி கட்டுப்பாடுகளை பரிந்துரைத்தனர். அவை, கடுமையாக அமலாக்கப்பட்டன. இதன் காரணமாக, நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்காகப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது; கடும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது.

எனவே, பெரும்பாலான உணவுப் பொருட்கள், கூப்பன் (ரேஷன்) அட்டைகள் மூலமே வழங்கப்பட்டன. தற்போதைய தலைமுறையினருக்கு 'ரேஷன்' அட்டை என்றால் என்ன என்று தெரியாது. 1960 களில் இருந்தே, அரிசிக்காக 'ரேஷன்' அட்டை முறை அமலில் இருந்தது. மஞ்சள் நிறத்தில், புத்தக வடிவில் மடித்து இருந்தமையால், அது 'கூப்பன் புத்தகம்' எனறு அழைக்கப்பட்டது. கூட்டுறவு கடைகளில் மட்டுமே அதற்கு பொருட்களை கொள்வனவு செய்ய முடியும் என்பதால் கூட்டுறவு கடையையும் அக்காலததில் பலர் 'ரேஷன் கடை' என்றழைத்தனர்.

குடும்பத்தில் ஒவ்வொரு நபருக்கும் ஒரு புத்தகம் வீதம் வழங்கப்பட்டு இருந்தது. அதில் 52 சிறிய பெட்டிகள் அச்சிடப்பட்டு இருக்கும். அவை, வருடத்தில் 52 வாரங்களை குறிக்கும் வகையில் 1 முதல் 52 வரையிலான எண்கள் குறிப்பிடப்பட்டு இருந்தன. ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை கூட்டுறவு சங்கக் கடைக்குச் சென்று, புத்தகத்தைக் கொடுத்தால், அதன் முகாமையாளர் அந்தப் பெட்டிகளில் ஒன்றைக் கத்தரித்து எடுத்துவிட்டு, சலுகை விலையில் இரண்டு கொத்து அரிசியை வழங்குவார்.

குடும்பத்தில் ஐந்து பேர் இருந்தால், அந்த வாரத்துக்கு அந்தக் குடும்பத்துக்கு பத்து கொத்து அரிசி கிடைக்கும். வருடத்தில் 52 வாரங்களில் 52 பெட்டிகளும் வெட்டி எடுக்கப்பட்டதன் பின்னர் புதிதாக 'கூப்பன் புத்தகம்' வழங்கப்படும்.

1965 முதல் 1970ஆம் ஆண்டுவரை பிரதமராக இருந்த டட்லி சேனாநாயக்கவின் காலத்தில், சலுகை விலையில் அரிசி வழங்க முடியாததால் அரசாங்கம் ஒரு கொத்து அரிசியை, இலவசமாக வழங்கி மற்றைய ஒரு கொத்து அரிசியை சந்தை விலைக்குக் குறைந்த ஆனால், அதிக விலைக்கு விற்றது. மக்கள் இதை விரும்பவில்லை.

எனவேதான், 1970ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது, சிறிமாவோ அம்மையார் "சந்திர மண்டலத்தில் இருந்தேனும் பறிக்கப்பட்ட இரண்டு கொத்து அரிசியை, சலுகை விலைக்கு வழங்குவேன்" என்ற வாக்குறுதியை அளித்து பதவிக்கு வந்தார். ஆனால், அவர் அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. மாறாக, அவரது காலத்தில் உணவுக்குப் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. அதனைத்தான் மேலே குறிப்பிட்டோம்.

அவரது காலத்தில் மாசி, சீனி, மா, பருப்பு போன்ற வேறு சில பொருட்களின் தட்டுப்பாட்டின் காரணமாக, அவை வெள்ளை நிற அட்டை ஒன்றின் மூலம் விநியோகிக்கப்பட்டன. அரிசி கூப்பன் புத்தகத்தைப் போலன்றி, இது குடும்பத்துக்கு ஒரு அட்டை வீதம் வழங்கப்பட்டது. அதற்கு மாதமொரு முறையே பொருட்கள் வழங்கப்பட்டன. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைப்படி ஒவ்வொரு குடும்பத்துக்குமான பொருட்களின் அளவு அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

'ரேஷன்' முறைப்படி விநியோகிக்கப்பட்ட பொருட்கள், எவ்வகையிலும் போதுமானதாக இருக்கவில்லை. எனவே கடும் பஞ்ச நிலை உருவாகியது.

சில பொருட்களின் விலை, 1971ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து 1973ஆம் ஆண்டு ஆரம்பம் வரையிலான ஒரு வருட காலத்தில், பத்து மடங்காக உயர்ந்தது. ஐந்து சதத்துக்கு விற்கப்பட்ட பனிஸின் விலை 50 சதமாகியது. ஐந்து சதத்துக்கு விற்கப்பட்ட தேநீர் 40 சதமாகியது. அரிசி மற்றும் மா ஆகியவற்றின் தட்டுப்பாட்டின் காரணமாக, மக்கள் வாழ்க்கையில் ஒருபோதும் உண்ணாதவற்றையும் அக்காலத்தில் உண்டனர். சிலர் வாழை மரத்தின் கிழங்கையும் அவித்துச் சாப்பிட்டனர். சிலர் வெறும் கீரை வகைகளை அவித்து உண்டனர்.

கிராமப் புறங்களில் இவ்வாறாவது மக்கள் வாழ்ந்தாலும், நகரப் புறங்களிலும் பெருந்தோட்டத்துறையிலும் மக்களின் நிலை பல மடங்கு மோசமாகியது. தோட்டப்புற மக்கள் வேலை தேடி, கிராமங்களுக்குச் செல்ல முற்பட்டனர். அவர்களது கடும் வறுமையைக் கிராமப்புற செல்வந்தர்கள் மிக மோசமாகத் துஷ்பிரயோகம் செய்தனர்.

பாண் சுகபோகப் பொருளாக இருந்தது. ஒரு இறாத்தல் பாணுக்காக பல மணித்தியாலங்கள் வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்தது. ரேஷனுக்கு விநியோகிக்கப்படும் சீனியின் விலை, இறாத்தல் 72 சதமாக இருந்தது. ஆனால், வெளிச்சந்தையில் அதன் விலை 7 ரூபாய் 50 சதமாகும். எனவே, ஏழைகள் ரேஷனுக்கு வழங்கப்படும் சீனியை, வெளிக்கடைகளுக்கு விற்று, வீட்டுக்குத் தேவையான ஏனைய உணவுப் பொருட்களை விலைக்கு வாங்கினர்.

சீனித் தட்டுப்பாட்டின் காரணமாக, உறவினர்கள் வீட்டுக்கு வந்த போதும் சீனி இல்லாமல் தேநீர் வழங்க மக்கள் பழகினர். தேநீர் அருந்தும் போது, சீனிக்குப் பதிலாக சில குடும்பங்கள் தேங்காய்த் துண்டுகளைப் பாவித்தன.

வர்த்தகர்கள் அரிசி, மிளகாய் ஆகிய பொருட்களைப் பதுக்குவதைத் தடுப்பதற்காக, இப்பொருட்களில் இரண்டு இறாத்தலுக்கு மேல் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்துக்கு எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டது. அதைக் கண்காணிக்க, மாவட்ட எல்லைகளில் மரக்கட்டைகளால் தடை போடப்பட்டு, பொலிஸார் காவலில் இருந்தனர். மக்கள் இவற்றை, 'அரிசிப் பொல்லு', 'மிளகாய்ப் பொல்லு' என்று அழைத்தனர். இந்த இடங்களில் பஸ்களில் பயணிக்கும் பிரயாணிகள் இறக்கப்பட்டு, பஸ்கள் சோதனையிடப்பட்டன.

அக்காலத்தில் நடைமுறையில் இருந்தவற்றை, இது போன்றதோர் சிறிய கட்டுரையில் விளக்க முடியாது. இப்போதும் நாம் அவ்வாறானதொரு நிலையை நோக்கிப் போகிறோமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

## கடிதங்கள்



### பாலத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

கிண்ணியா பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட, காக்காமுனை கிராம சேவகர் பிரிவிலுள்ள மயில்தீவு பிரதான வீதியிலுள்ள பாலம், உடைந்து, சேதமடைந்து, பல மாதங்கள் கடந்தும், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியூடாகத் தினமும் பிரயாணம் செய்கின்ற மாணவர்கள், வியாபாரிகள், வயோதிபர்கள், பெண்கள் ஆகியோர் சிரமப்படுவதாகத் தெரிவிக்கின்றனர். இவ்வீதியை விவசாயிகளே அதிகமாகப் பயன்படுத்துவதால் இயந்திரங்கள், உழவு இயந்திரங்கள், விதைகள், பசளைகள் போன்றவற்றை எடுத்துச் செல்வதில், விவசாயிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பாதையானது காக்காமுனை, மயில்தீவு ஊடாக சூரங்கல், மணியரசன்குளம், கற்குழி, வட்டமடு, தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை, கந்தளாய் போன்ற பிரதேசங்களுக்கு செல்லும் பிரதான பாதையாகக் காணப்படுகிறது.

இதைப் புனர்நிர்மாணம் செய்து தருமாறு, அதிகாரிகளிடம் கோரியும் எந்தப் பயனும் கிட்டவில்லையெனவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது. எனவே, இவ்வீதியில் உடைந்து கிடக்கும் பாலத்தை புனரமைத்துத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் பிரதேச மக்கள் கோருகின்றனர்.

-ஏ.ஆர்.எம். றிபாஸ்

LK Newspapers Vibes Community

தஞ்சை

# எம்.ஜி.ஆர் சிலைகள் உடைப்பு

## அ.தி.மு.கவினரிடையே அதிர்ச்சி

தந்தை பெரியார் உள்பட பல்வேறு தலைவர்களின் சிலைகளை உடைப்பது, அவமரியாதை செய்வது என்பது தமிழகத்தில் கடந்த சில வருடங்களாக வழக்கமாகிக் கொண்டிருக்கிறது. அதனால் தலைவர்கள் சிலைகளை பாதுகாக்க இரும்பு தடுப்புகள் அமைத்துள்ளனர். தற்போது தஞ்சையில் எம்.ஜி.ஆர் சிலை உடைத்துள்ள சம்பவம் அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தினரிடையே (அ.தி.மு.க.) அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



தஞ்சை வடக்கு வீதியில் பல வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டிருந்த மார்பளவுள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு அவரது பிறந்த நாள், நினைவு நாட்கள் உள்பட முக்கிய தினங்களில் கட்சி தொண்டர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்து வந்தனர்.

இந்த நிலையில், நேற்று (25) காலை அந்த வழியாகச் சென்றவர்கள் சிலையை பார்த்த போது எம்.ஜி.ஆர் சிலையை காணவில்லை. இந்த தகவல் வேகமாக பரவியதால் அ.தி.மு.க. நிர்வாகிகள் கரந்தை அறிவுடைநம்பி உள்பட பலர் திரண்டதால் அந்த இடத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

உடைக்கப்பட்ட சிலை பீடத்தின் பின்பக்கம் கிடந்துள்ளது. அந்த சிலையை மீண்டும் அதே இடத்தில் வைக்குமாறும் எம்.ஜி.ஆர் சிலையை உடைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தஞ்சை மேற்கு பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்துள்ளனர்.

இந்நிலையில், வடக்கு வாசலைச் சேர்ந்த சேகர், குடிபோதையில் சிலையைச் சேதப்படுத்தியது சி.சி.டி.வி காட்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், அவரை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வட்டப்பகுதி

## கல்லூரிக்கு தங்களுடைய இடத்தை

# தானமாக வழங்கிய 3 சகோதரர்கள்

காட்டுமன்னார்கோவில் வட்டப்பகுதி மிகவும் பின் தங்கிய பகுதியாகும். இங்கு விவசாயமே பிரதான தொழிலாகும். இப்பகுதியில் அரசு கலைக்கல்லூரி அமைக்க வேண்டும் என்று கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இப்பகுதி பொதுமக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

கடந்த 2017ம் ஆண்டு தமிழக அரசு உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து அந்தக் கல்லூரி காட்டுமன்னார்கோவில் அரசு ஆண் மேல்நிலைப்பள்ளியில் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் கல்லூரிக்குக் கட்டிடம் கட்ட நிதியும் ஒதுக்கப்பட்டது. இந்தக் கல்லூரியில் காட்டுமன்னார் கோவில் வட்ட பகுதி மற்றும் வெளி மாவட்டத்திலிருந்தும் மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர்.

இந்த நிலையில் கல்லூரிக்குப் போதுமான இடம் பள்ளியில் இல்லாததால் நெருக்கடியில் கல்லூரி நடத்தப்பட்டு வந்தது. இந்தக் கல்லூரிக்குக் கடந்த 3 ஆண்டுகளாக இடத்தைத் தேர்வு செய்யும்



பணிகள் நடந்தது. சரியான இடம் கிடைக்காமல் கல்லூரி கட்டுவதற்கு தாமதம் ஏற்பட்டு வந்தது.


இதனையறிந்த, சிதம்பரத்தில் ஹோட்டல் மற்றும் விவசாயம் உள்ளிட்ட பல்வேறு தொழில்களை நடத்தி வரும் சகோதரர்களான தொழிலதிபர்கள் சேதுராமன், கேதார்நாதன், சுவேதகுமார் ஆகியோர் குமராட்சி அருகே கீழவன்னியூர் கிராமத்திலுள்ள அவர்களுக்குச் சொந்தமாக உள்ள 3 ஏக்கர் நிலத்தினை தானமாகத் தருவதாக மாவட்ட ஆட்சியரிடம் ஒப்புதல் வழங்கினர்.

ஈரோடு

# சிறுத்தையுடன் கட்டிப்புரண்ட விவசாயிகள்

ஈரோடு மாவட்டம் பாப்பாங்குளம் கிராமத்தை சேர்ந்தவர் மாறன் (வயது 62). விவசாயி. அங்குள்ள தனது சோளத்தோட்டத்தில் நேற்றுக் காலை 7 மணியளவில் வேலை செய்து கொண்டு இருந்தார்.

அப்போது தோட்டத்தில் புகுந்து பதுங்கியிருந்த சிறுத்தை ஒன்று மாறனின் மீது திடீரென பாய்ந்து கடித்து குதறத்தொடங்கியது. இதனால் நிலைகுலைந்துபோன மாறன் "அய்யோ அம்மா" என்று அலறினார். பின்னர் துணிச்சலை வரவழைத்துக்கொண்டு சிறுத்தையுடன் போராட தொடங்கினார்.



இந்நிலையில், பக்கத்து தோட்டத்தில் வேலை செய்துகொண்டு இருந்த விவசாயி வரதராஜ் மாறனின் சத்தத்தை கேட்டு அங்கு ஓடிவந்தார். சிறுத்தையிடம் இருந்து மாறனை மீட்க முயன்றார்.

அப்போது ஆவேசம் அடைந்த சிறுத்தை வரதராஜை நோக்கி பாய்ந்து அவரையும் தாக்கியது. ஒரு கட்டத்தில் 2 விவசாயிகளும் சேர்ந்து சிறுத்தையுடன் சோளத்தோட்டத்துக்குள் கட்டிப்புரண்டு சண்டையிட்டார்கள்.

அப்போது சத்தம் கேட்டு வெங்கடாசலம் என்பவர் ஓடிவந்தார். அவரையும் சிறுத்தை தாக்கியது. ஆனால் அவர் தப்பி ஓடிவிட்டார். மேலும் அவர் அக்கம் பக்கத்தில் வேலை செய்துகொண்டு இருந்தவர்களை அங்கு அழைத்துக்கொண்டு ஓடி வந்தார். சத்தம் கேட்டு அங்கு கிராம மக்கள் ஏராளமானோர் கூடினர் அதனையடுத்து, சிறுத்தை தப்பியோடிவிட்டது. காயமடைந்த இவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

புதுடெல்லி

## இந்தியாவின் 73 ஆவது குடியரசு தினம் இன்றாகும்

# மோப்ப நாய் உதவியுடன் கடும் சோதனை

இந்திய நாட்டின் 73வது குடியரசு தினம் இன்றாகும். (26) முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. மக்கள் அதிகம் நடமாட கூடிய இடங்களில் தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது. பஸ் நிலையங்கள், விமான நிலையங்கள், முக்கிய ரயில்வே சந்திப்புகள் அனைத்திலும் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டு பயணிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக இன்று திருச்சி ஜங்ஷன் ரயில் நிலையத்தில்



திருச்சியில் இருந்து காரைக்கால் வழியாக எர்ணாகுளம் செல்லும் விரைவு ரயிலில் மோப்பநாய் மற்றும் வெடிகுண்டு தடுப்பு பிரிவு அதிகாரிகள் மற்றும் மத்திய பாதுகாப்பு படை மற்றும் ரயில்வே பாதுகாப்பு படை உள்ளிட்ட காவல் குழுக்கள் இணைந்து பல்வேறு இடங்களில் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

ரயில்வே ஜங்ஷனில் உள்ள இரு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்தும் இடங்கள், சரக்கு கையாளக்கூடிய பகுதிகள், பயணிகள் இருக்கக்கூடிய நடைமேடைகள் உள்ளிட்டவற்றில் சோதனைகள் செய்யப்படுகிறது. அதோடு எர்ணாகுளம் செல்லும் விரைவு ரயிலில் உள்ள அனைத்து பெட்டிகளிலும் பயணிகளின் உடைமைகளை மோப்ப நாயின் உதவியோடு சோதனை செய்தனர். மேலும் வெடிகுண்டு தடுப்பு பிரிவு குழுக்களும் பெட்டிகளில் சோதனையில் ஈடுபட்டனர்.

# அமைச்சரவை முடிவுகள்

## அக்குரஸ்ஸவுக்கு புதிய பஸ் நிலையம்

2012 ஆம் ஆண்டு அக்குரஸ்ஸ நகர அபிவிருத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அக்கருத்திட்டத்தின் முதலாம் கட்டமாக 4.5 ஏக்கர்களை அபிவிருத்தி செய்து பிரதான பஸ் நிலையத்தை நிர்மாணித்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்திகளுக்குத் தேவையான அடிப்படை விடயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 1.75 ஏக்கர்களில் 20 தரிப்பிடங்களுடனும் மற்றும் ஏனைய வசதிகளுடனும் கூடிய பிரதான பஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக அங்கிகாரம் கிடைத்துள்ளது.

கருத்திட்டத்தின் இறுதி கட்டிட வடிவமைப்பு மற்றும் பொறியியல் திட்டங்களுக்கமைய 474 மில்லியன் ரூபாய்கள் மதிப்பீட்டுச் செலவின் கீழ் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரான பிரதமர் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## உதவித்தொகையை அதிகரித்தல்

தற்காலிக வீடுகளில் வசித்து வரும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் இக்கருத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் குடும்பமொன்றுக்கு 600,000 ரூபாய்கள் உயர்ந்தபட்சம், உதவித்தொகையொன்று வீடமைப்பு நிர்மாணத்தின் முன்னேற்றத்திற்கமைய வழங்கப்படும்.

இக்கருத்திட்டம் 2020 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பின்னர், கட்டுமானப் பொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளமையால், அதனால் 600,000 ரூபாய்கள் உதவித்தொகையில் எதிர்பார்க்கின்ற வகையிலான வசிப்பதற்குப் பொருத்தமான முழுமையான வீடொன்றை அமைப்பதற்கு சிரமமாக அமையும்.

அதனால், 2022 ஆம் ஆண்டு தொடக்கம் தெரிவு செய்யப்படும் பயனாளிக் குடும்பங்களுக்கு குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் செலுத்தப்படும் உதவித்தொகையை 650,000 ரூபா வரைக்கும் அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## அபிவிருத்தி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

நிர்மாணம், கட்டுமாணம், நிதியிடல், தொழிற்படுத்தல் மற்றும் ஒப்படைத்தல் பொறிமுறையின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கொட்டா வீதியில் அமைந்துள்ள, 01 ஏக்கர் 01 ரூட் 9.29 பேர்ச்சர்ஸ் காணித்துண்டில் போட்டித்தன்மை அடிப்படையில் முதலீட்டு முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி, கழிவுப் பொருள் அகற்றுகை மற்றும் சமூக துப்பரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் கீழ்காணப்படும் நிரந்தர அமைச்சரவை மீளாய்வுக் குழுவால் அதி - உயர் அபிவிருத்திக் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு குறித்த காணியை லங்கா ஒரெக்ஸ் லீசிங் கம்பனியின் தலைமைக் கம்பனியான LOLC Investment Holdings Two (Pvt) Ltdஇற்கு நீண்டகாலக் குத்தகையின் அடிப்படையில் வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் குறித்த காணியை அப்பணிக்காக பயன்படுத்துவதற்கான யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் தேசிய கொள்கை

சிறுநீரகம், ஈரல் இதயம், நுரையீரல் மற்றும் கணையம் போன்ற உள்ளக உறுப்புக்கள் செயலிழக்கும் தருவாயில் உள்ள நோயாளர்களின் உயிரைப் பாதுகாப்பதற்கான வெற்றிகரமான சிகிச்சை முறையாக உடல் உறுப்புக்கள், இழையங்கள் மற்றும் உயிரணுக்கள் மாற்று அறுவைச் சிகிச்சை முறை கருதப்படுகின்றது.

இலங்கையில் கொழும்பு மற்றும் கண்டியில் அமைந்துள்ள பிரதான தேசிய நிலையங்கள் 02 உள்ளிட்ட 09 அரச மருத்துவமனைகளில் தற்போது உடல் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உடல் உறுப்பு நன்கொடையாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களைப் போலவே உறுப்புக்களைப் பெறும் நோயாளர்களின் வாழ்க்கை மட்டத்தை உயர்த்துதல் மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உடல் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை தொடர்பான தேசிய கொள்கையொன்றின் தேவை கண்டறியப்பட்டுள்ளது.



அதற்கமைய, உலக சுகாதார மாநாட்டின் 57 ஆவது சமவாயம் மற்றும் மனித உறுப்புக்கள் மாற்று அறுவைச் சிகிச்சை தொடர்பாக உலக சுகாதார தாபனத்தின் வழிகாட்டல் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு உடல் உறுப்புக்கள், இழையங்கள் மற்றும் உயிரணுக்கள் மாற்று அறுவைச் சிகிச்சை தொடர்பாக இலங்கையில் தேசிய கொள்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது அதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## தேசிய கொள்கை

தற்போது காணப்படும் 'தரப்பண்பான சுகாதார சேவைகள் மற்றும் நோயாளர்களின் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கைக்கு' 2015 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உலக சுகாதார மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 'நோயாளர்களின் பாதுகாப்பு தொடர்பான உலகளாவிய நடவடிக்கைகள்' தொடர்பாக முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு குறித்த கொள்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சுகாதார சேவைகளின் தரப்பண்பு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் குறித்த திருத்தப்பட்ட கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## தேசிய கருத்திட்டம்

2022 ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தின் மூலம் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கைத்தொழில் பேட்டைகளை அமைக்கும் வேலைத்திட்டத்தை பிரதேசவாரியாக கொண்டு சென்று பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்திலான கைத்தொழில் வலயங்களை அமைத்து பிரதேச கைத்தொழில் மயமாக்கல் செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய கைத்தொழில் அமைச்சால் வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதன் கீழ் மாவட்டம்/பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் அடையாளங் காணப்பட்டுள்ள காணியின் அளவுக்கேற்ப இரண்டு வகையான கைத்தொழில் பேட்டைகளை அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

5-15 ஏக்கர் காணியிலான தொழிற்சாலைகள் 15-35 அளவிலான சிறியளவிலான கைத்தொழில் பேட்டை மற்றும் 15-25 ஏக்கர் காணியிலான தொழிற்சாலைகள் 35-50 ஏக்கர் அளவிலான நடுத்தர அளவிலான கைத்தொழில் பேட்டைகளை அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பதற்காக தேசிய குழுவொன்று மற்றும் மாவட்ட நடவடிக்கைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## நெல் கொள்வனவு வேலைத்திட்டம்

நெல் விவசாயிகளின் அறுவடைக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொடுப்பதற்கும், அரசாங்கம் நெல் இருப்பை பாதுகாப்பாக பேணுவதையும் நோக்காகக் கொண்டு 2021/2022 பெரும் போகத்தில் அரசாங்க நெல் கொள்வனவு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த நெல் அறுவடையை கொள்வனவு செய்தல், நெல் சந்தைப்படுத்தல் சபை ஊடாக நேரடியாகவும் மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர்களால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை இயக்குவதன் மூலமும் மேற்கொள்ளப்படும்.

அதற்குத் தேவையான 29,805 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு அரச வங்கிகள் மூலம் வழங்கப்படும். அதற்கமைய, விவசாய அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(i) 2021/2022 பெரும் போகத்தில் அரசாங்கம் நெற் கொள்வனவு செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் தனியார் துறையினருடன் போட்டித்தன்மை மிகுந்த விலைகளுக்கு சந்தைப்படுத்தல் சபை மூலம் நெல் கொள்வனவு செய்தல்

(ii) 2021/2022 பெரும் போகத்தில் நெல் அறுவடையில் குறைவு ஏற்பட்டால் அதனால் பாதிப்புக்குள்ளாகும் நெல் விவசாயிகளின் வருமான மட்டத்தைப் பாதுகாப்பதற்காக ஒரு கிலோகிராம் நெல்லுக்கு 25 ரூபாய் வீதம் இழப்பீட்டுத் தொகை செலுத்துதல்

## அரச துறைக்காக கொள்வனவு செய்தல்

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் தொற்று நீக்கப்பட்ட திரவ சிறியளவு சத்தூட்டத் திரவம் ( Sterile Liquid Small Volume Parenterals - SLSVP Injectable ) அரச துறைக்காக கொள்வனவு செய்வதற்காக கிட்டத்தட்ட அரசாங்கம் வருடாந்தம் 3,000 மில்லியன் ரூபாய்களை (15 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) செலவிடுகின்றது.

குறித்த சத்தூட்ட திரவம் 50 மில்லியன்கள் வருடாந்தம் உற்பத்தி செய்யக்கூடிய வகையிலான இயலளவைக் கொண்ட தொழிற்சாலையொன்றை பெல்லேகலே பிரதேசத்தில் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட கெலூான் லயிஃப்சயன்சஸ் (தனியார்) கம்பனிக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

ஏற்புடைய தரநியமங்களுடன் தொற்று நீக்கப்பட்ட திரவ சிறியளவு சத்தூட்டத் திரவத்தை இலங்கையில் உற்பத்தி செய்வதற்கு இயலுமை கொண்ட ஒரே கம்பனியான இக்கம்பனி 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தொடக்கம் உற்பத்திகளை விநியோகிப்பதற்குத் தயாராகவுள்ளது. அதற்கமைய, குறித்த உற்பத்திகளை அரச துறையின் தேவைகளுக்காக விநியோகிப்பதற்கு இயலுமான வகையில் குறித்த கம்பனிக்கும் அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## சட்டத்தை திருத்தம் செய்தல்

போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காகவும் அவர்களைப் புனர்வாழ்வளிப்பதற்கான ஏற்பாடுகள், 2007 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமையானவர்கள் (சிகிச்சையளித்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல்) தொடர்பான சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டத்தில் காணப்படும் ஏற்பாடுகள், சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் திருத்தம் செய்யப்பட வேண்டுமென அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## தடுத்தலுக்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் கீழ்க்காணும் உடன்பாடுகளை எட்டியுள்ளது.

(i) இரட்டை வரி விதிப்பை தவிர்த்தல் மற்றும் வருமான வரி செலுத்தாமல் விடுவதைத் தடுத்தல் போன்றவற்றுக்காக இந்திய அரசாங்கத்துடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒப்பந்த கூட்டணிக்கு கையொப்பமிடல்

(ii) துருக்கி அரசாங்கத்துடன் வருமான அடிப்படையிலான வரி தொடர்பாக இரட்டை வரி விதிப்பை தடுத்தல் மற்றும் வரி செலுத்தாமல் தவிர்ப்பதை தடுத்தலுக்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்

(iii) செக் குடியரசின் அரசாங்கத்துடன் வருமான அடிப்படையிலான வரி தொடர்பாக இரட்டை வரி விதிப்பை தடுத்தல் மற்றும் வரி செலுத்தாமல் தவிர்ப்பதை தடுத்தலுக்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்

அதற்கமைய, குறித்த ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதற்கும், 2017 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் குறித்த ஒப்பந்தங்களை பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

LK Newspapers Viber Community



## கிண்ணியா தேசிய கல்லூரியை

# வீழ்த்திய மட்டு கல்லடி சிவானந்தா

அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த பாடசாலைகளுக்கிடையிலான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட 15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான தொடரின் ஓர் அங்கமாக கிண்ணியா தேசியக் கல்லூரிக்கும், மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா தேசியக் கல்லூரிக்கும் இடையிலான போட்டியில் சிவானந்தா 141 ஓட்டங்களால் வென்றது.

சிவானந்தாவின் மைதானத்தில் இடம்பெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிவானந்தா, 45.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, 261 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கிண்ணியா, 32.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது.

## சிநேகபூர்வ போட்டியில் பூனொச்சிமுனையை

# வென்ற சாய்ந்தமருது மியன்டாட்

எம்.என்.எம். அப்ராஸ்

அம்பாறை மாவட்டத்தில் முன்னணிக் கழகமான சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக் கழகத்துக்கும் மட்டக்களப்பு மாவட்ட பூனொச்சிமுனை விளையாட்டுக் கழகத்துக்குமிடையே இடம்பெற்ற சிநேகபூர்வ கடினபந்து கிரிக்கெட் போட்டியில் மியன்டாட் 6 விக்கெட்டுகளால் வென்றது.

இப்போட்டியானது பூனொச்சிமுனை இக்ரா பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

20 ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பூனொச்சிமுனை, 4 விக்கெட்டுகளை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது.



துடுப்பாட்டத்தில், சஜி 50 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு, 184 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மியன்டாட், 17.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. துடுப்பாட்டத்தில், ஏ.எம். பயாஸ் 87 ஓட்டங்களைப் பெற்றார்.

இப்போட்டியின் நாயகனாக பயாஸ் தெரிவாகியிருந்தார்.

## மருதமுனை நெஷனல் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின்

# சீருடை வெளியீட்டு நிகழ்வு

நாசிக் நபாயிஸ்

மருதமுனை நெஷனல் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் 2022ஆம் ஆண்டுக்கான புதிய சீருடை அறிமுக மற்றும் வெளியீட்டு நிகழ்வானது கழகத்தின் தவிசாளரும், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தருமான எம்.என்.எம். பதுர்டீனின் ஒருங்கிணைப்பில், கழகத்தின் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸின் இணைப்புச் செயலாளருமான எம்.ஏ. சப்றாஸ் நிலாமின் தலைமையில் மருதமுனை அல்-ஹம்றா மகாவித்தியாலயத்தின் ஆராதனை மண்டபத்தில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு ஓய்வுநிலை-இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளரும், சமூக சேவையாளருமான எம்.என். முஹம்மட் அப்துல் காதர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, தனது சொந்த நிதியில் கழகத்துக்கான சீருடையை





அறிமுகம் செய்து வெளியீட்டு வைத்தார். அத்துடன் 2022ஆம் ஆண்டுக்கான கழகத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்களும் காதரின் கரங்களால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கழகத்தின் ஸ்தாபகரும் தற்போதைய செயலாளருமான எஸ். றுபைடீன், பிரதித் தலைவர்களான எம்.ஏ. பரீஸ், என்.எம்.மு ஸ்னி, பொருளாளர் இஸட். சாஹித் முனீர், கணக்காய்வாளர் எம்.எம். விஜிலி ஆசிரியர், முகாமையாளர் ஏ.எம். நிஸாத், உதவி முகாமையாளர் எம்.ஜே. றைசுல், உதவிச் செயலாளர் ஏ.எம்.ஏ. மிர்தாஸ், உதவிப் பொருளாளர் எம்.ஏ.எம். றைஹான், சமூக சேவைக்கான இணைப்பாளர் ஏ.எம். றணீஸ், அணித் தலைவர் ஜே. ஜெஸான், உப அணித் தலைவர் ஏ. அஜினத் மற்றும் கழக வீரர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## இலங்கைக்கெதிரான

# அவுஸ்திரேலியக் குழாமில் மக்டர்மூட், ஹெட், ஹென்றிக்கஸ்

இலங்கைக்கெதிரான தொடருக்கான அவுஸ்திரேலியாவின் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிக் குழாமில் பென் மக்டர்மூட், ட்ரெவிஸ் ஹெட், மொய்ஸஸ் ஹென்றிக்கஸ் ஆகியோர் மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை முதற்தடவையாக அவுஸ்திரேலிய இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிக் குழாமில் ஜையை றிச்சர்ட்ஸன் இடம்பெற்றுள்ளார்.

இந்நிலையில், டேவிட் வோணர், மிற்செல் மார்ஷ் ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

குழாம்: ஆரோன் பின்ஞ் (அணித்தலைவர்), அஸ்தன் அகர், பற் கமின்ஸ், ஜொஷ் ஹேஸில்வூட், ட்ரெவிஸ் ஹெட், மொய்ஸஸ் ஹென்றிக்கஸ், ஜொஷ் இங்லிஸ், பென் மக்டர்மூட், கிளென் மக்ஸ்வெல், ஜையை றிச்சர்ட்ஸன், கேன் றிச்சர்ட்ஸன், ஸ்டீவன் ஸ்மித், மிற்செல் ஸ்டார்க், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், மத்தியூ வேட், அடம் ஸாம்பா.



உக்ரேன்

## அதிகரிக்கும் உக்ரேன் பதற்றங்கள்:

# படைகளை அனுப்பும் நேட்டோ

### எச்சரிக்கையில் ஐ.அமெரிக்க படைகள்

படைகளைத் தயார் நிலையில் வைத்திருப்பதாகவும், கிழக்கு ஐரோப்பாவில் மேலும் கப்பல்களையும், தாக்குதல் ஜெட்களையும் களமிறக்கியுள்ளதாக வட அத்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (நேட்டோ) நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஏறத்தாழ 8,500 ஐக்கிய அமெரிக்கப் படைகள் உயர் எச்சரிக்கையில் உள்ளதாகத் தெரிவித்துள்ள ஐ.அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம்,



உக்ரேனில் ரஷ்யா உள்நுழைந்தால் பிராந்தியத்தில் களமிறங்குவதற்கான உத்தரவுகளுக்காக காத்துள்ளதாகக் கூறியுள்ளது.

உக்ரேனின் எல்லையை அடையும் வகையில் வடக்கு, கிழக்கு, தெற்காக 100,000 என மதிப்பிடப்படும் படைகளை ரஷ்யா குவித்ததையடுத்து பதற்றங்கள் அதிகரித்தவாறு காணப்படுகின்றன.

ஊடுருவலொன்றைத் திட்டமிடுவதை ரஷ்யா மறுத்துள்ளதோடு, ரஷ்யாதான் இலக்கு என்பதற்கான ஆதாரம் மேற்குலக பதிலளிப்பு எனக் கூறியுள்ளது.

சீனா

## ஐ. அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பலில்

# எ.:.ப்-35 விபத்து; எழுவர் காயம்

தென் சீனக் கடலில், ஐக்கிய அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பலொன்றின் தளத்தில் எஃப்-35 ஜெட் விபத்துக்குள்ளான நிலையில் அந்த ஜெட்டின் விமானி வெளியேற்றப்பட்டதுடன், எழுவர் காயமடைந்ததாக ஐக்கிய அமெரிக்க பசுபிக் கப்பற் படை அறிக்கையொன்றில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

வழமையான பறப்பு நடவடிக்கைகளில் விமானி



ஈடுபட்டிருந்தபோது விபத்து இடம்பெற்றுள்ளதாக குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கப்பற் தளத்தில் சேதம் மேலோட்டமானது எனவும், கப்பலானது அதன் வழமையான நடவடிக்கைகளை ஆரம்பித்ததாகவும், விமானமானது மீட்புப் பணியில் உள்ளதாக ஜப்பானிலுள்ள ஐ.அமெரிக்க கடற்படையின் ஏழாவது கப்பற் தொகுதியின் பேச்சாளர் லெப்டினன்ட் மார்க் லங்ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

ஐ.அ. அமீரகம்

## ஐ.அ. அமீரகம் மீதான இரண்டாவது ஏவுகணைத் தாக்குதலில்

# யேமனின் ஹூதிகள் தோல்வி

ஐக்கி அமெரிக்க இராணுவத்தைக் கொண்டுள்ள தளமொன்றை இலக்கு வைத்த ஐக்கிய அரபு அமீரகம் மீதான ஏவுகணைத் தாக்குதலொன்றை ஈரானுடன் இணைந்த யேமனின் ஹூதிகள் நேற்று முன்தினம் மேற்கொண்டிருந்தனர்.

எனினும், தாக்குதலானது ஐக்கிய அமெரிக்காவால் வடிவமைக்கப்பட்ட பற்றியோட் இடைமறிப்புகளாலும் முறியடிக்கப்பட்டதாக ஐ. அமெரிக்க, அமீரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐ.அ. அமீரகம் மீதான இரண்டாவது தாக்குதல் இது என்பதோடு, இதன் காரணமாக புதைகுழிகளுக்குள் ஐ. அமெரிக்கப் படைகள் சென்றிருந்தன.

இம்மாதம் 17ஆம் திகதி அமீரகத்தின் தலைநகர் அபு தாபியிலுள்ள எரிபொருள் கிடங்கொன்றைத் தாக்கியதில் மூவர் கொல்லப்பட்டிருந்தனர்.



# ஏதென்ஸை முடக்கிய கடும் பனிப்பொழிவு



கிரேக்கத் தலைநகர் ஏதென்ஸை கடும் பனிப்பொழிவு நேற்று முன்தினம் மூடியிருந்த நிலையில், போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டிருந்தது.

தென் கொரியா


# ஏவுகணைகளை ஏவிய வட கொரியா?

வட கொரியாவானது தனது கிழக்குக் கரையிலுள்ள கடலுக்குள் இரண்டு ஏவுகணைகளை நேற்று ஏவியுள்ளது போலத் தோன்றுவதாக தென் கொரியாவின் பணியாட் தொகுதியின் தலைவர் தெரித்துள்ளார்.

இந்நிலையில், தென் கொரிய இராணுவமானது என்ன ஏவுபொருள் ஏவப்பட்டது என்பதை உறுதிப்படுத்த ஆராய்ந்து வருகிறது.

இவ்வாண்டின் வடகொரியாவின் ஐந்தாவது ஏவுகணை ஏவல் இதுவாகும்.





கமரூன்

# 'அரங்கு நெரிசலில் எண்மர் பலி'

கமரூனின் யவுண்டே ஒலெம்பே அரங்கத்தில் சனநெரிசல் ஒன்றில் குறைந்தது எட்டு இரசிகர்கள் உயிரிழந்ததுடன், 38 பேர் காயமடைந்ததாக அறிக்கையொன்றில் அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தேசங்களுக்கான ஆபிரிக்கக் கிண்ணத் தொடரின் கமரூனின் இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப்



போட்டிக்கு முன்பதாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நுழைவாயிலில் கூக்குரலிட்ட இரசிகர்கள் மிதிபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தொடரின் முதலாவது சுற்றுப் போட்டிகளில் இப்போட்டிகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட புது அரங்குகளில் இரசிகர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்த நிலையில், நுழைவாயில் கதவுகளை அதிகாரிகள் திறந்து விட்டதோடு, பாரிய போக்குவரத்துகளை ஒழுங்குபடுத்தியதோடு, இரசிகர்களை கவர்ந்திழுப்பதற்காக இலவச டிக்கெட்டுகளை வழங்கியிருந்தனர்.

LK Newspaper Viber Community

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 26 ஜனவரி 2022, இல. 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.